# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:210


## சம்பூர்க் கடலில் திடீர் தாக்குதல் நடத்தி கடற்படைப் படகைப் புலிகள் கைப்பற்றினர்

மூதூர்,ஜூன்24

திருகோணமலை நகருக்குத் தெற்கே - திருகோணமலை குடாவின் தென்முனையில் உள்ள - சம்பூர் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் காலையில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மீது தாங்கள் நடத்திய திடீர்த் தாக்குதலில் படையினரின் ரோந்துப் படகு ஒன்றைக் கைப்பற்றி இருப்பதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அந்தப் படகில் இருந்து கிரனேட லோஞ்சர் ஒன்றையும், வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் தொலைத்தொடர்பு கருவி என்பவற்றையும் கடற்புலிகள் கைப்பற்றி இருப்பதாக மூதூரில் விடுதலைப் புலிகளின் உளளூர் அரசியல் பிரிவினர் விடுத்த செய்திக்குறிப்பை மேற்கோள்காட்டி இணையச் செய்திச் சேவை ஒன்றில் தகவல் வெளியாகி இருக்கின்றது.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சம்பூர்க் கிராமம் மீது கடற்படையினர் பரவலாகக் கடும் பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகவும் -

இத்தாக்குதலினால் பொதுமக்கள் இருவருக்குக் காயம் ஏற்பட்டதுடன் பாடசாலையும், வீடுகள் சிலவும் சேதமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பிலிருந்து தகவல்ஏதும் வெளியிடப்படவில்லை. (உ-ஐ)

## 'உதயன்' பிரதம ஆசிரியர் நேற்று விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன்24

'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் (வயது 59) நேற்றுக் காலை யாழ்.பலாலி வீதி - நாவலர் வீதிச் சந்தியில் (இலுப்பையடிச் சந்தியில்) இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தார்.

அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திக்கொண்டு சென்ற 'உதயன்' அலுவலக உதவியாளர் ஆர்.சிவநேசனும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

நாவலர் வீதியில் வந்துகொண்டிருந்த இவர்களது மோட்டார் சைக்கிளும், பலாலி வீதி வழியே வேகமாக வந்துகொண்டிருந்த ஈ.பி.டி.பி அமைப்பின் 'பிக் - அப்' வாகனம் ஒன்றுமே மோதிக்கொண்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பேரியல் அஷ்ரப் உட்பட 3 எம்.பிக்களை இடைநிறுத்த முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

## அவர்களிடம் விளக்கமும் கோரப்படுமாம்

கொழும்பு,ஜூன்24

**கட்சிக் கட்டுப்பாடுகளை மீறி நடந்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் பேரியல் அஷ்ரப், மருதூர்க்கனி, யு.எல்.முகைதீன் ஆகிய மூன்று எம்.பிக்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து இடைநிறுத்துவது என அக்கட்சியின் செயற்குழு நேற்றுக் கூடி முடிவு செய்திருக்கின்றது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சித் தலைமையகமான 'தாருஸலாமில்' நேற்று ரவூப் ஹக்கீம் தலைமையில் நீண்ட நேரம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கட்சியின் செயற்குழு கூடி எடுத்த தீர்மானத்துக்குக் கட்டுப்படாமல் - அதனை மீறி - கட்சியின் கட்டுக்கோப்பைச் சீர்குலைக்கும் வகையில் நடந்துகொண்டதற்காக கட்சி உறுப்பினர்கள் மூவருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் வற்புறுத்தியதாகவும்-

அதனையடுத்தே அமைச்சர் பேரியல் அஷ்ரப், மருதூர்க்கனி, யு.எல்.முகைதீன் ஆகியோரை இடைநிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் - 'தாருஸலாம்' வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அணியைச் சேர்ந்த நான்காவது நாடாளுமன்ற உறுப்பினரான விமலவீர திஸநாயக்க தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட பெரும்பான்மை இனத்தவர் என்றும் கட்சி உறுப்பினர் அல்லாத அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இடம் இல்லை என்றும் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

செயற்குழுவின் சிபார்சுக்கு அமைய அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கு கட்சியின் தவிசாளர் பதவி வழங்கப்பட்டிருந்தபோதும் அதனை ஏற்றுக் கொண்டதற்கான சம்மதக் கடிதத்தை அவர் இன்னமும் கட்சியின் பொதுச் செயலாளரிடம் வழங்கவில்லை என்றும் -

அதற்கான விளக்கத்தை அளிப்பதற்கு அமைச்சர் பேரியலுக்கு மூன்று நாள்கள் அவகாசம் வழங்குவது என்றும் மத்திய குழு முடிவு செய்திருக்கிறது. (ஐ-ம-10)

## பிரேரணையை ஆதரிப்பதா?

## ஜே.வி.பி. மத்திய குழு நேற்று பல மணி நேரம் கூடி ஆராய்வு!

### முடிவு இன்று வெளியிடப்படும்

கொழும்பு,ஜூன்24

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா என்பது உட்பட தற்போதைய அரசியல் சூழ்நிலையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜே.வி.பியின் மத்திய குழு நேற்றுக் கூடி நீண்ட நேரம் ஆராய்ந்தது.

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் ஆரம்பமான கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று நள்ளிரவு வரை நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த மத்தியகுழு உறுப்பினர்கள் 33பேர் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றினர்.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கட்சி பெரும்பாலும் இன்று உத்தியோகபூர்வமாக வெளியிடும் என்று ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

## தலங்காவற் பிள்ளையார் கோயிலடியில்

## பிஸ்டல் குழு உறுப்பினர்களை கொன்றதாக படையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்24

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரும் அவரது சகாவும் யாழ்ப்பாணத்தில் படையினரால் கொல்லப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுதன் என அடையாளம் காணப்பட்ட அந்த உறுப்பினரிடம் இருந்து மைக்றோ பிஸ்டல்கள் இரண்டு, பிஸ்டல் ஹோல்சர் மற்றும் கைக்குண்டு ஆகியவற்றையும் சில ஆவணங்களையும் படையினர் மீட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலுக்கு அருகே நேற்றுமுன்தினம் மாலை படையினர் சோதனை நடத்திய வேளை பிரஸ்தாப உறுப்பினர்கள் இருவரும் தப்பிச் செல்ல முற்பட்டவேளை படையினர் அவர்களைச் சுட்டுக் கொன்றதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலங்காவற் பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே. (ஐ)

## அவசரகாலச் சட்டம் தோற்றால் புலிகள் மீதான தடை செயலற்றுவிடும்

### நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்24

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்படுமாயின் விடுதலைப் புலிகள் மீதான தடை செல்லுபடியற்றதாகிவிடும் என்று நீதித்துறை அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் அந்தச் சட்டவிதிகளின் கீழ்தான் மேற்கொள்ளப்படுகின்றன.

அவசரகாலச் சட்டம் தோற்கடிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் இருக்கும் அமைச்சரவையில் ஹக்கீம் இனிமேல் இருக்கமாட்டாராம்!

கொழும்பு,ஜூன்24

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இருக்கும் எந்த ஓர் அமைச்சரவையிலும் இனிமேல்தான் இருக்கப்போவதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது :-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை விட்டு வெளியேறினாலும் தொடர்ந்தும் அதன் மாற்றுக் குழுவாகவே செயற்படும்.

நாடாளுமன்றத்தில் எதிரணி வரிசையில் நாம் அமர்ந்திருந்தாலும் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கும் உத்தேசம் எமக்கு இல்லை.

முஸ்லிம் காங்கிரஸ், அரசை விட்டு வெளியேறியது குறித்து எம்முடன் பேசுவதற்கு அரசு முன்வந்தால் அதற்கு நாமும் தயார்.

ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்படுவது குறித்து நாம் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை - என்று அவர் மேலும் சொன்னார். (ம-9)

### கடற்படைச் சிப்பாய் கைது

கொழும்பு,ஜூன்24

குருநாகல் வாரியப்பொல நகரில் உணவகம் ஒன்றில் தனது ஆடைக்குள் கைக்குண்டை மறைத்து வைத்திருந்த கடற்படைச் சிப்பாயைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

வடபகுதியில் கடமையாற்றும் இந்தச் சிப்பாய் விடுமுறையில் தனது வீட்டுக்கு வந்திருந்த சமயமே கைது செய்யப்பட்டுள்ளார். உணவகத்தில் நீண்ட நேரம் தனித்திருந்த இவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட உணவக உரிமையாளர் பொலீஸாருக்கு அறிவித்தார்.

உடனடியாக அங்கு விரைந்த பொலீஸார் கடற்படைச் சிப்பாயைக் கைது செய்தனர். (ஐ-ம)

### இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு

கொழும்பு,ஜூன்24

இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாடு முழுவதும் நடைபெற இருப்பதாக இராணுவத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

ஜூலை முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


### அம்பாறையில் பிஸ்டல் குழு சூடு

அம்பாறை,ஜூன்24

அம்பாறை நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.00 மணியளவில் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் நடத்திய தாக்குதலில் பொலீஸார் தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தின் போது முஹமட் ஜவாஸ் என்ற சிவிலியனும் காயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் அதிவண. டுலிப் டி சிகேரா தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அந்த நிகழ்வில் நல்லெண்ணக்குழு பிரதிநிதி டி.ஆர்.அருமைநாயகம் உரையாற்றுகிறார். அவருக்கு அருகில் ஆயர் டுலிப் டி சிகேரா அமர்ந்துள்ளார். கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.

(படம்: றோய் மதிவதனன்)

# அடுத்த ஆண்டுக்கான பாடநூல்கள் விநியோகம் இந்த வருட முடிவில்!

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஜூன்24

2002ஆம் ஆண்டுக்கான, மாணவர்களின் இலவச பாடநூல் விநியோகத்தை இவ்வருடமுடிவிலேயே மேற்கொள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் பொருட்டு அடுத்த வருடத்துக்கு மாணவர்களின் விநியோகத்துக்குத் தேவையான நூல்களின் பட்டியலை திணைக்களம் கல்வித் திணைக்களங்களூடாக பாடசாலை அதிபர்களிடம் கேட்டுள்ளது.

"இலவசமாகக் கிடைக்கும் பாடநூலகளை உண்மையிலேயே மதிக்க வேண்டும். பத்திரமாக அவற்றைப் பாவிக்க வேண்டும். மீண்டும் பாடசாலைக்கு அவற்றை திருப்பிக்கொடுக்க வேண்டிய பொருளாக அவற்றை மதிப்பதற்கு மாணவர்களது மனப்பாங்கை வளர்த்தல் அவசியம். இம் மனப்பாங்கை உறுதிப்படுத்த தொடர் மதிப்பீட்டுமுறை செயற்படுத்தப்பட வேண்டும்" - என்று கல்வி வெளியீட்டுபதில் ஆணையாளர் ரஞ்ஜனி சேனநாயகா அறிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ சாதாரணதர பெறுபேறுகள் வெளியிடப்படும் போதும், 12ஆம் தரத்தில் சேர்க்கும் போதும் 10,11ஆம் தரங்களில் வழங்கப்பட்ட பாடநூல்களை மீள அளித்தமைக்கான உறுதிச்சான்றுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். விடுகைப் பத்திரம், நற்சான்றுப் பத்திரம் ஆகியன வழங்கும் போதும் பாடநூல் சம்பந்தமான விசேட குறிப்பொன்றை உட்படுத்தல் வேண்டும் எனவும் ரஞ்ஜனி சேனநாயகா மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலையிலிருந்து விலகி வேறு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு அவர்களிடம் வழங்கப்பட்ட பாடநூல்களை புதிய பாடசாலைக்குக் கொண்டு செல்ல அனுமதித்து விலகல் பத்திரத்தில் அது பற்றி குறிப்பிட வேண்டும் என்றும்-

புதிய கல்விச்சீர்திருத்தத்தின் கீழ் 2000, 2001 ஆகிய வருடங்களில் விநியோகிக்கப்பட்ட தரம் 7, தரம் 8க்கான தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய நூல் வகைகளை 2002ஆம் ஆண்டில் மாணவர் அதிகரிப்புப் போன்ற விசேட காரணத்துக்காக அன்றி வேறு எதற்காகவும் கோரக்கூடாது என்றும்-

குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில் சமயபாடம் கற்பிக்காவிட்டாலும் அச் சமயம் சார்ந்த மாணவர் இருப்பின் அவர்களுக்கு சமய நூல்கள பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் -

இலவச பாடநூல் விநியோகம் தொடர்பான சுற்று நிருபத்தில் சுட்டிக்காட்டி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-152)

### வடமராட்சி கிழக்கில்

# பயன்தரு மரங்களை அழிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

வடமராட்சி,ஜூன்24

வடமராட்சி கிழக்கில் பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டு வருவதை உடனடியாகத் தடைசெய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் சி.துரைராசாவினால் இக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அப்பிரதேசத்தில் உள்ள பயன் தரு மரங்களான பனை, மா, வேம்பு போன்ற மரங்கள் அண்மைக் காலத்தில் அதிகளவில் அழிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதம்பிள்ளை இவ்விடயம் தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார். (ம-182)


ஸ்ரீகாமாட்சி அம்பாள் துணை

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நம

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 11ஆம் நாள் நாளை (25-06-2001) திங்கட்கிழமை பகல் 11.56 மணிமுதல் 1.25 மணிவரையுள்ள கன்னிலக்கின சுப முகூர்த்த சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறைசெல்வி

### துஷாந்தி

அவர்களுக்குப் பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி வி.இராஜேஸ்வரன (குட்டி) - நிலானி தம்பதிகள்.

செல்வி இ.கனகேஸ்வரி (அன்ரி)

(மலர் அக்கா)

*கலைமகள் பாலர் பாடசாலை,*
*619, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார்கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(89387)


## கண்ணீர் அஞ்சலி

வன்னி மண்ணில் வளங்கொழிக்கும்
கிளிநொச்சியில் முன்னாள் ஆசிரிய ஆசானாக/அதிபராக,
கோட்டக் கல்வி அதிகாரியாக, உதவிக் கல்விப் பணிப்பாளராக,
கல்விப் பணிப்பாளராக, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி
அமைச்சின் வன்னி இணைப்பாளராக வன்னியில் புகழ்பூத்த ஆசான்

### பெருந்தகை பொன்.சபாபதி

அவர்கள் 19.06.2001 அன்று காலமானார். அவர்களிற்கு எனது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன்
முன்னாள் உடற்கல்வி ஆசிரியை,
கிளிநொச்சி/முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம்,
முரசுமோட்டை, பரந்தன்.

*வரணி இயற்றாலை,*
*வரணி*

(C-17197)

### பிந்துனுவெவ முகாம் படுகொலைகள்:

# மேலதிக படையினரை அழைத்து தாக்குதலைத் தடுத்திருக்கலாம்!

## ஆணைக்குழு முன் கொட்டகதெனிய சாட்சியம்

கொழும்பு,ஜூன்24

"முகாமைச் சூழ பெருமளவானோர் கூடும்போது மேலதிக பொலீஸாரை அழைத்தும் உள்ளூரில் ஊரடங்குச்சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தியும் தாக்குதலை பொலீஸார் தடுத்திருக்கலாம்" என்று குற்றத்தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மாஅதிபர் எச்.எம்.ஜி.எஸ். கொட்டகதெனிய நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

பண்டாரவளைத் தடுப்பு முகாம் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நேறறு முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி.எச்.குலதிலகவின் தலைமையில் நடைபெற்ற விசாரணையின் போது சாட்சியத்தினை சிரேஷ்ட அரசசட்டவாதி எஸ். கமலத் நெறிப்படுத்தினார்.

பொலீஸார் கிராம மக்கள் கூடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கூட்டம் கூடியதை அடுத்து முகாமில் உள்ள இளைஞர்களை பொலீஸார் வெளியேற்றி வேறு இடத்துக்கு கொண்டு சென்றிருக்கலாம். இதன் மூலம் இச்சம்பவத்தைத் தடுத்திருக்கலாம். - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### குடத்தனை மேற்கில் நூலகம்

வடமராட்சி,ஜூன்24

கடந்த சில மாதங்களாக இடம் பெயர்ந்து புலோலியில் இயங்கி வந்த குடத்தனை பொது நூலகம் தற்போது குடத்தனை மேற்கில் இயங்க ஆரம்பித்துள்ளது.

குடத்தனை மேற்கில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடமொன்றில் நூலகம் தற்போது இயங்கி வருகிறது. (ம-182)

### மட்டு. மாவட்ட இணைப்பதிகாரி நியமனம்

கொழும்பு,ஜூன்24

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய பாதுகாப்பு இணைப்புக் கட்டளை அதிகாரியாக லெப்டினன்ட் கேணல் மானமடுவ பதவியேற்றுள்ளார்.

இதுவரை காலமும் கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றிய லெப்டினன்ட் கேணல் வி.எல்.ஆர்.அன்ரனிஸ் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றதை அடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

### சைக்கிளிலிருந்து விழுந்தவர் அவ்விடத்திலேயே பலி

தென்மராட்சி,ஜூன்24

சைக்கிளில் இருந்து மயங்கி வீழ்ந்தவர் அந்த இடத்திலேயே பலியான சமபவம் கடந்த புதன்கிழமை கரவெட்டி நுணுவில் பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்றது.

கரவெட்டி கிழக்கு இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ள சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அப்புக்குட்டி சிவகுரு (வயது62) என்பவரே மரணமானவராவார். (ம-117)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்24

அண்மையில் நியமனம் பெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி பெற்ற ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அனுமதி பெறுவது தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (ம-3)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை பேரின்பநாதன்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பேரின்பநாதன் நேற்று (23.06.2001) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் இளைய புத்திரரும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் மயூரேசன் (லண்டன்), பிரதாபன், விஜிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தையா - ஞானலட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும் வயிரவானந்தன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சத்தியபாமாவின் மைத்துனரும் கருணாநிதியின் சகலனும் தர்ஷினி, சுலக்ஷினி, சுபாஷினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2001) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சக்தி முற்றம்',*
*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*

(89391)

தகவல்:
பண்டிதர் மு.கந்தையா
(மாமன்)

## பேதுருப்பிள்ளை அகுஸ்தீனுப்பிள்ளை

(திரவியராசா)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நொச்சிமுனையை வதிவிடமாகவும் கொண்ட பே.அகுஸ்தீனுப்பிள்ளை(திரவியராசா) கடந்த 21.06.2001 அன்று நொச்சிமுனையில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை தயாபரியின் அன்பு மகனும் பெனடிக்நம்மாவின் அன்புக் கணவரும் யோகராசா, மரியநாயகம், சகாயசீலன், றொசீற்றா எயிலோசியார், கியூபேட், ஜெறாட் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நொச்சிமுனையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

*No.5, அடப்பன் றோட்,*
*3ஆம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(89389)

தகவல்:
பே.அந்தோனிப்பிள்ளை
(சகோதரன்)

## திருமதி செல்லமுத்து மார்க்கண்டு

துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து மார்க்கண்டு நேற்று (23.06.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் வே.மார்க்கண்டு (ஓய்வுபெற்ற அதிபர், யா/காசிநாதர் வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும் அமரர் மா.பாலகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர், கல்வித்திணைக்களம், கொழும்பு), அமரர் மா.இராமகிருஷ்ணன் (ஓய்வு பெற்ற பட வரைஞர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு), திருமதி கா.மங்களேஸ்வரி அவர்களின் அன்புத் தாயாரும் இ.காராளசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர், யா/காசிநாதர் வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியாரும் திருமதி இ.இன்பமலர் அவர்களின் அன்புப் பெரியதாயும் இ.இராமச்சந்திரன் அவர்களின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்று வேரோண்டை குடும்ப மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

(C/17196)

தகவல்:
திரு.இ.காராளசிங்கம்
(மருமகன்)

# கேரளாவில் பெரும் ரயில் விபத்து:

# 57 பயணிகள் பலி; 230 பேர் காயம்!



## உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் அச்சம்

கோழிக்கோடு,ஜூன்24

**இந்தியாவின் கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே மங்களூர் - சென்னை தபால் ரயிலின் 6 பெட்டிகள் நேற்று முன்தினம் தடம்புரண்டு கடலுந்தி ஆற்றில் விழுந்ததில் 57 பேர் உயிரிழந்துள்ளனர்; 230 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் இருப்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.**

மங்களூரில் இருந்து சென்னை நோக்கிப் புறப்பட்ட தபால் ரயிலில் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் கோழிக்கோட்டுக்கும் சொர்ணூருக்கும் இடையே உள்ள கடலுந்திப் பாலத்தைக் கடக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கடலுறுத்தி ஆற்றின் மீது கட்டப்பட்ட அந்த இரும்புப் பாலத்தில் இருந்த தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டதால், தபால் ரயிலின் 8 பெட்டிகள் தடம்புரண்டதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெட்டிகள் தடம்புரண்டதைத் தாக்குப்பிடிக்க முடியாத பழைய இரும்புப் பாலம் இடிந்து விழுந்தது. இதனால் 6 ரயில் பெட்டிகள் ஆற்றில் விழுந்து மூழ்கின.

அந்தச் சமயத்தில் அப்பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக கடலுந்தி ஆற்றில் சுமார் 15 அடிகள் உயரத்துக்கு வெள்ளம் பாய்ந்தது. அதனால் பெட்டிகள் ஆற்று நீரில் மூழ்கின. அவற்றிலிருந்த பயணிகள் பலரும் மூச்சுத்திணறி உயிரிழந்தனர்.

உலக அரங்கில்

சமீப காலத்தில் கேரளாவில் நிகழ்ந்த பாரிய விபத்து இது என்று கூறப்படுகிறது. (ஒ-7-4)



**இந்தியாவின் கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே தடம்புரண்ட மங்களூர் - சென்னை தபால் ரயிலின் பெட்டிகள், கடலுந்தி ஆற்றில் வீழ்ந்து கிடப்பதை மேற் படத்திலும், ஆற்று வெள்ளத்தில் மூழ்கிய ரயில் பெட்டி ஒன்றில் இருந்து உயிரிழந்த பயணி ஒருவரின் சடலம் மீட்புப் பணியாளர்களால் மீட்டு வரப்படுவதை கீழ்ப்படத்திலும் காணலாம். (ஒ)**

### தஞ்சம் கோருவோரை நாடு கடத்த உதவும்

## ஜேர்மனிய விமான சேவைக்கு எதிராகப் போராட்டங்கள்

கோல்,ஜூன்24

ஜேர்மன் விமான சேவையான 'லுப்தான்ஸா'வின் இணையத்தளத்தை மனித உரிமை ஆர்வலர்கள் முடக்கியுள்ளனர்.

அத்துடன் கோல் நகரில் லுப்தான்ஸாவின் வருடாந்தக் கூட்டத்தையும் அவர்கள் குழப்ப முனைந்தார்கள்.

ஜேர்மனியில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்ப 'லுப்தான்ஸா' விமான சேவை உதவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மனித உரிமை ஆர்வலர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் ஜேர்மனியில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டு, நாடுகடத்தும் உத்தரவைப் பெறும் சுமார் 10ஆயிரம் பேர்களை அவர்களது சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவதில் ஏராளமான லாபத்தை லுப்தான்ஸா ஈட்டுகிறது என்று மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.(ஒ-10)

### பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்

## முஷாரப் அதிபர் பதவியேற்றது சட்டத்துக்கு விரோதமானது

### முன்னாள் நீதியரசர்கள் கருத்து

இஸ்லாமாபாத்,ஜூன்24



பாகிஸ்தான் ஜனாதிபதியாக இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் பதவியேற்றிருப்பது சட்டப்படி செல்லாது என்று பாகிஸ்தானிய முன்னாள் உயர் நீதி மன்ற நீதியரசர்கள் கூறியுள்ளனர்.

இராணுவ அரசின் இந்த நடவடிக்கையை அரசியல் கட்சிகள் எதிர்க்குமானால், ஜனாதிபதியாக முஷாரப் பதவியேற்றிருப்பது பாகிஸ்தானிய அரசமைப்புக்கு விரோதமானது என்று நீதிமன்றம் பிரகடனம் செய்ய முடியுமென்று அவர்கள் தெரிவித்தனர். ஆனால் தற்போதைய உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் இஷாக் கசன்கான்தான் முஷாரப்புக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளதாகவும் -

முஷாரப் ஜனாதிபதியாவதற்கு, பின்கதவைப் பயன்படுத்தியுள்ளதாகவும் - அவர்கள் கூறினார்கள்.

முன்னாள் நீதியரசர் ஷகாத் அல்ஷா கருத்துத் தெரிவிக்கையில், துப்பாக்கி முனையில் எதையும் எவரும் செய்யலாமென்றும் -

ஆனால் அது சட்டவிரோதமானது என்பதுதான் சட்டத்தின் நிலைப்பாடு என்றும் -கூறினார். (ஒ)

### மனு தள்ளுபடி

இஸ்லாமாபாத்,ஜூன்24

ஜெனரல் பர்வேஷ் முஷாரப் பாகிஸ்தானின் அதிபராகப் பதவியேற்றதை எதிர்த்து அரசியல் சாசன நடைமுறையை அடுத்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை லாகூர் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்க மறுத்துவிட்டது.

அதிபருக்கு எதிராக எந்தவொரு சட்ட மனுவையும் தாக்கல் செய்ய முடியாது என்று கூறி இந்த மனு நிராகரிக்கப்பட்டது. (ஒ)

### கின்னஸ் சாதனைக் கேக்

மொஸ்கோ,ஜூன்24

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஹோட்டலில் தயாரிக்கப்பட்ட 'கேக்' கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

'ரபிஸன் வால் பாவ்ஸ் காபா' என்ற ஹோட்டலின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட கேக்கே சாதனை படைத்துள்ளது.

144 மீற்றர் நீளமான இந்தக் கேக் 4 தொன்கள் எடை கொண்டது.

உலகில் இதுவரை தயாரிக்கப்பட்ட கேக்குகளில் இதுவே மிகப் பெரியதாகும். (ஒ)

## ஜெயலலிதாவுக்கு ஆதரவாக ஊழல் வழக்கில் சாட்சியம்

சென்னை,ஜூன்24

தமிழக முதல்வர் ஜெயலலிதா சம்பந்தப்பட்ட நிலக்கரி ஊழல் வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியான இந்திய நிர்வாக சேவை அதிகாரி சுந்தரம், குறுக்கு விசாரணையில் ஜெயலலிதாவுக்குச் சாதகமாக சாட்சியமளித்துள்ளார்.

இதற்கு முன்னைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சார சபைக்காக நிலக்கரி இறக்குமதி செய்ததில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல் குறித்த வழக்கில் அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா உட்பட 10 பேர் மீது தனி நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இது தொடர்பாக 1999 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் சுந்தரம் சாட்சியமளித்தபோது, ஜெயலலிதாவின் தோழி சசிகலா, ஊழலுக்கு ஒத்துழைக்குமாறு தன்னை தொலைபேசி மூலமாகவும், ஆட்களை அனுப்பியும் மிரட்டியதாகக் கூறியிருந்தார்.

ஆனால் ஜெயலலிதா மீண்டும் முதல்வராகியுள்ள நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற குறுக்குவிசாரணையில், தான் சசிகலாவுடன் ஒரு தடவை கூடப் பேசியதில்லை என்றும் -

பொலிஸாரின் வற்புறுத்தலாலேயே அவர் மிரட்டியதாக முன்னர் கூறியதாகவும் - சுந்தரம் கூறியுள்ளார். (ஒ)

### ஜேர்மனியில் டிராக்-ரயில் மோதல்; மூவர் பலி

பேர்லின்,ஜூன்24

ஜேர்மனியில் பயணிகள் ரயில் ஒன்று, அமெரிக்க இராணுவ 'டிரக்' ஒன்றுடன் நேற்றுக் காலை மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மூவர் உயிரிழந்ததுடன், 12 பேர் காயமடைந்தனர்.

விபத்தில் பயணிகள் ரயிலின் பெட்டி ஒன்று தீப்பிடித்து எரிந்ததாலேயே உயிரிழப்புகள் ஏற்பட்டன. (ஒ)

## மஸிடோனிய படையெடுப்பால் யுத்த நிறுத்தம் முறியும் நிலை

ஸ்கொப்ஜே,ஜூன்24

மஸிடோனியாவில் கடந்த 11நாள்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த போர்நிறுத்தம், மஸிடோனிய இராணுவத்தின் பாரிய படை நடவடிக்கையால் நேற்று முன்தினம் முறிவடைந்தது.

அல்பேனியத் தீவிரவாதிகளின் பிரதான நிலையாகக் கருதப்படும் அரபி லோவோ கிராமத்தைக் கைப்பற்றும் நோக்கில் மஸிடோனியப் படைகள் தாக்குதலைத் தொடங்கியுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர்ந்தால், 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தலைநகர் ஸ்கொப்ஜே ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகும் என்று தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

அரபிலோவோ கிராமத்தில் எழுநூறு தீவிரவாதிகள் வரை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆயினும் மஸிடோனியத் தலைநகரைத் தாக்கக்கூடிய அளவுக்கு அவர்களிடம் ஆயுத பலம் உள்ளதா என்பது குறித்து இராணுவ ஆய்வாளர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

மஸிடோனிய இராணுவத்தின் கடும்போக்கால், மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த சமாதானப் பேச்சுக்களைக் கைவிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

மஸிடோனியாவில் அல்பேனியர்கள் அதிகம் வாழும் எல்லைப்புறக் கிராமங்களை கொசோவாவுடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட அல்பேனியத் தீவிரவாதிகளுக்கும் மஸிடோனியப் படைகளுக்கும் இடையே இடம்பெற்ற யுத்தம் பதினொரு நாள்கள் முன்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட போர் நிறுத்தத்தால் தணிந்திருப்பது தெரிந்ததே. (ஒ-4)

### மீன்பிடி வலையில் சிக்கியதால்

## 186 பேருடன் சுவீடிஷ் கப்பல் ஆபிரிக்கக் கடலில் தத்தளிப்பு

சுவீடிஷ் பயணிகள் கப்பல் ஒன்று 186 பயணிகளுடன் நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

அந்தக் கப்பலின் கப்டனின் மனைவி செய்தி நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு, நடுக்கடலில் கப்பலில் தவிப்பவர்களைக் காப்பாற்ற ஆவன செய்யுமாறு கோரியதையடுத்தே இத்தகவல் வெளிவந்துள்ளது.

லைபீரியாவைச் சேர்ந்த 186 பயணிகள் கானா செல்வதற்காக இந்தக் கப்பலில் பயணித்ததாகவும் -

அந்தக் கப்பலின் இயந்திர சுழலியில் மீன்பிடி வலைகள் சிக்கிக் கொண்டதாகவும் -

இதனால் மேற்கு ஆபிரிக்காவுக்கு அண்டிய கடல் பிரதேசத்தில், குறைந்த அளவு எரிபொருளுடன், [illegible]

இயந்திர சுழலி இயங்காததால் கப்பல் கட்டுப்பாடின்றி அலைகளின் போக்கில் அலைக்கழிக்கப்படுவதால், கப்பலைக் கண்டுபிடிக்கும் பணியில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஒ)

### புஷ் - அரபாத் தொலைபேசி உரையாடல்

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ், பலஸ்தீனத் தலைவர். யசீர் அரபாத்துடன் தொலைபேசி மூலம் நேற்று முன்தினம் உரையாடினார்.

அப்போது மேற்காசிய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கும்படி அமெரிக்க அதிபர் பலஸ்தீனத் தலைவரைக் கேட்டுக் கொண்டார். (ஒ)

## மனிதர், விலங்குகளின் படங்களை பிரசுரிக்கத் தலிபான் தடைவிதிப்பு

காபூல்,ஜூன்24

ஆப்கானிஸ்தானில் மனிதர்கள் அல்லது மிருகங்களின் படங்களைப் பிரசுரம் செய்ய தலிபான் அரசு தடைவிதித்துள்ளது.

இஸ்லாமிய 'ஷரியத்' சட்டங்களைக் கடுமையாகக் கடைப்பிடித்து வரும் தலிபான் அரசின் சார்பில், தலிபான்களின் ஆன்மீகத் தலைவர் முல்லா மொகமட் ஓமர் வெளியிட்ட இந்தத் தடையுத்தரவு உள்ளூர் வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது.

அந்த உத்தரவின்படி, ஆப்கானிஸ்தானில் உற்பத்தி செய்யப்படும் எந்தவொரு பொருளிலோ அல்லது வெளியிடப்படும் எந்தவொரு பிரசுரத்திலோ மனிதர்கள் அல்லது விலங்குகளின் உருவங்கள் அல்லது படங்கள் காணப்படக்கூடாது.

அத்துடன் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனின் வசனங்களைப் பிரசுரிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஏற்கனவே தொலைக்காட்சிகள் தடைவிதிக்கப்பட்டிருப்பதுடன், புகைப்படங்கள் எடுத்துக்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. (ஒ-7-4)

# தொடரும் மனித உரிமை மீறல்களை தடுக்க நடவடிக்கை ஏதும் இல்லை

## அங்கிலிக்கன் திருச்சபை ஆயரிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24 மனித உரிமை மீறல் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகள், அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் குலிப்டி சிக்கேராவிடம் தெரிவித்துள்ளனர்.

அங்கிலிக்கன் ஆயர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக இணையப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் இணையப்பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு திறந்த வெளிச் சிறைச் சாலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிட முடியாது. ஒன்று கூடும் சுதந்திரம் எதுவுமில்லை.

இங்கு வருமானம் தரும் தொழில்களான விவசாயம், மீன்பிடி போன்றவை முடக்கப்பட்ட நிலையிலுள்ளன. இதனால் விவசாய, மீன்பிடிக் குடும்பங்கள் மட்டுமல்ல சகல குடும்பங்களுமே தமது வருமானத்தை இழந்துள்ளன.

தொழில் மற்றும் வருமானம் இல்லாத காரணத்தினால் திருட்டு மற்றும் சட்ட விரோத மதுபான உற்பத்தி போன்றவை அதிகரித்து சமுதாயத்தைச் சீரழித்து வருகின்கின்றன.

வலி.வடக்குப் பிரதேசத்தில் கணிசமானபகுதிகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமையினால் இங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பத்தவர்கள் கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இந்த வளமான மண் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது.

யாழ்ப்பாண மக்கள் சுயமரியாதையுடன் வாழ்வதையே விரும்புகிறார்கள். அவர்கள் சமாதானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

நாட்டிலே உண்மையான சமாதானம் ஏற்பட வேண்டுமெனில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினால் மட்டுமே ஏற்பட முடியும்

மருந்துப் பொருள்களுக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்றும் இணையப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வைத்திய பிரச்சினைகள் தொடர்பாகச்சுட்டிக்காட்டிய போது ஆச்சரியத்துடன் கேட்டறிந்து கொண்ட அங்கிலிக்கன் ஆயர் இது தொடர்பாகக்கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கிக் கூறுவேன் என்று கூறினார்.

(க–5)

பச்சிலைப்பள்ளி

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -- பளை

லொறி விற்பனைக்கான

கேள்வி கோரல்

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான 40 ஸ்ரீ 2749 இலக்க இசுசு லொறி கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கேள்விப் பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக 1500/–வும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக 500/–வும் செலுத்துதல் வேண்டும் கேள்வி விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ இயக்குநர் சபைக்குப் பூரண அதிகாரமுண்டு.

விண்ணப்பங்கள் யாவும் கீழ்க் காணும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ, நேரிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடவும். முடிவு திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. லொறியைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 29 - 06 - 2001

- பொது முகாமையாளர்.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.
கோண்டாவில். (சி/17210)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா சண்முகரெத்தினம்

தோற்றம்:- 16 - 11 - 1936 மறைவு:- 20 - 06 - 2000

தென்னையின் இளநீர் போல
தென்றலின் இனிமை போல
இதமாக நீங்கள் பேசும்
தொனியின்றும் காதில் கேட்க...
உமையிழந்து ஓராண்டு
ஓடியே மறைந்ததுவோ!

அன்போடு எமையே தாங்கி...
இதமோடு காத்த உம்மை
இழந்ததால் தினமும் நாங்கள்
ஆறாத துயரம் கொண்டோம்!

குறைவின்றி இறைவன் தொண்டும்
கூடவே சமூகத் தொண்டும்
நிறைவுடன் செய்த நீங்கள்
நிர்மலன் தாளில் சென்று
நித்திய சாந்தி கொள்வீர்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, மகன், மகள், மருமகன்,
உறவினர்கள்.

29, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம். (89170)

### கசிப்பு 'பரல்'கள் சிக்கின

தென்மராட்சி, ஜூன் 24 கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு கசிப்பு 'பரல்'கள் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டன.

பொதுமக்கள் கொடுத்த புகாரை அடுத்து திடீர் வேட்டை நடத்திய அதிகாரிகள் கசிப்பு'பரல்'களைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## கடந்த இரண்டு வருடங்களாக அனுராதபுரம் சிறையில் வாடிய சுன்னாகம் இளைஞர் விடுதலை

கொழும்பு, ஜூன் 24 கடந்த இருவருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுன்னாகப் பகுதியைச்சேர்ந்த இளைஞனான யோசப் கிறிஸ்தராஜா என்பவர் வவுனியா மேல்நீதிமன்றத்தினால் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஊரெழு முகாம் படையினரால் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் அனுராதபுரம் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எதுவித குற்றமும் இன்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரஸ்தாப இளைஞனை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி சட்டத்தரணி எம். ரெமிடீயன் வவுனியா மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிஇளைஞனை விடுதலை செய்தார்.

பிரஸ்தாப இளைஞன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட காயங்களும் சிகரெட்டால் சுடப்பட்ட காயங்களும் வயரால் தாக்கப்பட்ட அடிகாயங்களும் காணப்படுவதாக சட்டத்தரணி நீதிபதியிடம் பிரஸ்தாபித்திருந்தார். (க–3)

## வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை மாலைகளில் ரியூட்டறிகள் இயங்கத் தடை

வலி. தென்மேற்கு, ஜூன் 24 வலி. தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் இனிமேல் வெள்ளிக்கிழமைகளில் மாலை 3 மணிக்குப் பின்னர் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தடை உத்தரவு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் இந்து மகாசபையால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே மேற்படி தீர்மானம் இந்து மகாசபையினால் எடுக்கப்பட்டதாக அதன் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தடை உத்தரவினை மீறி வகுப்பு நடத்தும் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-185)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு 42 ஆயிரம் ரூபா அபராதம்

வலி.வடக்கு, ஜூன் 24 சட்டவிரோதமான முறையில் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த இளையதம்பி முருகதாஸ் என்பவருக்கே நீதிபதி பா. சுப்பிரமணியம் இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

40 போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்கு 15 ஆயிரம் ரூபாவும், 125 போத்தல் கசிப்பு காய்ச்சப் பயன்படுத்தப்படும் கோடா வைத்திருந்தமைக்கு 25 ஆயிரம் ரூபாவும், கசிப்பு காய்ச்சும் உபகரணம் வைத்திருந்தமைக்கு 2 ஆயிரம் ரூபாவும் தண்டனையாக விதிக்கப்பட்டுள்ளது. (க–86)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 — 07 — 1928



மறைவு 05 — 07 — 2000

அமரர் சுப்பிரமணியம் அரியரத்தினம்
(ஓய்வுபெற்ற விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திதி: 24 - 06 - 2001

அன்பின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!!
எம்மைவிட்டு உங்கள் உடல் பிரிந்து
ஆண்டொன்று சென்றாலும்
எமது உயிருள்ளவரை உங்கள்
நினைவு எம்முடன் உயிர் வாழும்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:-
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தபாற்கந்தோர் வளவு,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (89246)

உதயன்

## நயினை பக்தர்கள் மீது ஏன் இந்தக் கெடுபிடி?

குடாநாட்டின் பிரபல இந்து யாத திரைத் தலமான நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி இருக்கிறது. இந்த உற்சவ காலத்தை குடாநாட்டு இந்துக்கள் தங்கள் புனிதமான வழிபாட்டுக்குரிய நாள்களாக மதிக்கின்றனர்.

ஆண்டுதோறும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வதற்காக நயினாதீவு செல்வது வழக்கம். ஆனால் குடாநாடு அரசுப் படைகள் வசமாகிய பின்பு, அண்மைய ஆண்டுகளில் நயினை உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்கள் பாதுகாப்பு என்ற பெயரில் மிகுந்த சோதனைக் கெடுபிடிகளை அனுபவித்தே ஆலயத்தைச் சென்றடைய வேண்டி இருக்கிறது.

நயினை அம்மன் பக்தர்கள் வழமைபோல் இம்முறையும் படையினரின் கடும் சோதனைகளுக்கு மத்தியில் உடல் களைத்து - மனம் சோர்ந்த - நிலையிலேயே அங்கு செல்வதாக வெளியாகி இருக்கும் செய்தி இந்துப் பெரியோர் மத்தியிலும் இந்து மக்கள் மத்தியிலும் பெரும விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்நகரிலிருந்து நயினாதீவுக்குப் புறப்படும் பக்தர்கள் அனைவரும் முதலில் யாழ்நகர பஸ்நிலையப் பகுதியில் வைத்து கடுமையான உடற்சோதனையின் பின்னரே பஸ்களில் ஏற்றப்படுகின்றனர்.

பின்னர் அல்லைப்பிட்டியில் உள்ள கடற்படையினரின் சோதனை நிலையத்தில் பக்தர்கள் அனைவரும் இறககப்பட்டு சோதனையிடப்பட்ட பின் அங்கு வைத்து அவர்களின் அடையாள அட்டைகள் பெறப்பட்டு அவற்றுக்குப் பதிலாக விசேட 'பாஸ்' வழங்கப்படுகிறது. நீண்ட நேரம் 'கியூவில்' நின்று 'பாஸ்' பெற்ற பின்னரே பக்தர்கள் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

பின்னர் அங்கிருந்து குறிகாட்டுவான் இறங்குதுறைக்குச் செல்லும் பக்தர்களுக்கு அங்கும் சோதனை காத்திருக்கிறது.

நயினை உற்சவம் ஆரம்பிப்பதற்கு சுமார் ஒரு மாதம் முன்னரே - கடந்த மாதம் 28 ஆம் திகதி - கூட்டப்பட்ட உற்சவகால ஏற்பாடுகள தொடர்பாக யாழ். செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பக்தர்களின் சிரமங்களை இயன்றளவு குறைப்பது தொடர்பாகவே பிரதானமாக ஆராயப்பட்டது.

நயினை செல்லும் பக்தர்களுக்கான பஸ் சேவையை யாழ். துரையப்பா ஸ்ரேடியப் பகுதியில் இருந்து நடத்துவது என்றும் -

பக்தர்களின் வசதி கருதி துரையப்பா ஸ்ரேடியப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் மற்றும் தற்காலிக மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவது எனவும் -

அங்கு வைத்து சோதனை செய்யப்பட்டபின் பக்தர்கள் செல்லும் வாகனங்களுக்குப் படையினர் பாதுகாப்பு வழங்குவர் என்றும் -

அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரேடியப் பகுதியில் வைத்து பயணிகளைச் சோதனை செய்வதன் மூலம் பயண வழியில் அவர்களது சிரமங்களைக் குறைக்க முடியும் என்றும் அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு மாறாகத் தற்போது பக்தர்கள் யாழ்.பஸ் நிலையப் பகுதியல் வைத்தே பஸ்களில் ஏற்றப்படுகின்றனர். அங்கு வைத்துச் சோதனைகளை முடித்துக்கொண்டு பஸ்களில் ஏறும் பயணிகளுக்குப் படையினர் வழிநெடுகப் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

இப்படியிருக்க -

படையினரின் பாதுகாப்புடன் செல்லும் பக்தர்களை மீண்டும் வழிநெடுகச் சோதனை செய்வது ஏன் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது.

நயினை நாகபூசணி அம்மனின் மஹோற்சவத்தின் முக்கிய திருவிழாக்கள் இனிமேல்தான் நடைபெற இருக்கின்றன. மேலும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அங்கு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பக்தர்களின் சிரமங்களை இயன்றளவு குறைக்க சம்பந்தப்பட்ட சகலரும் நடவடிக்கை எடுப்பார்களா?

# பண்ணைப் பாலம் மீண்டும் சேதம்!

## வாகனப் பயணிகள் இறங்கிச் செல்லும் நிலை

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ்நகருக்கும் தீவுப் பகுதிகளுக்கும் இடையே போக்குவரத்துக்குப் பயன்படும் பிரதான வீதியில் உள்ள பண்ணைப் பாலம் மீண்டும் பழுதடைந்துவிட்டது.

இதனால் தீவுப்பகுதியின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லும் பயணிகளும், தீவுப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளும் பண்ணைப் பாலத்தில் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு நீண்ட தூரம் நடந்து செல்லுமாறு அங்கு கடமையில் உள்ள படையினரால் பணிக்கப்படுகின்றனர்.

தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்துப் பாதையின் பிரதான நிலையமாக விளங்கும் பண்ணைப்பாலம் திருத்தப்படாதது குறித்து பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சேதமடைந்திருந்த அந்தப்பாலம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் பல லட்சம் ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டது. (ஐ-7)

# நாட்டு நடப்பு

கந்தையா விதானை வீட்டில்
கடப்புக்கை கிழடர் கூட்டம்
வந்தனை செய்து வீழ்ந்து
வழங்குகிறார் கையில் லஞ்சம்
தந்ததோ சிறுதொகை தானே
தரமாட்டேன் பிச்சைப்படி
வந்து நீவீர் கிடுகு பின்னும்
வழங்குவேன் பிச்சை படி என்றானே!

*- விகடகவி -*

# தமிழ்த் தலைவர்களுக்கு ஓர் படிப்பினை.....

மணிமண்டபம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ரவூப் ஹக்கீம் அவர்களிடமிருந்து அமைச்சர் பதவி பறிக்கப்பட்டுவிட்டது -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறி, எதிர்க்கட்சிகளுள் ஒன்றாகிவிட்டது -

இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாக உருவாகி வருவதாகச் சொல்லப்படும் ஜனதா விமுக்தி பெரமுனை என்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவைப் பெறும் தீவிர முயற்சியில் சந்திரிகா அரசு ஈடுபட்டிருக்கின்றது -

நமது நாட்டின் அரசியற் களத்தில் 'திடீர் திடீர்' என சென்ற வாரம் ஏற்பட்ட - ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடைய - பரபரப்பான இந்த நிகழ்ச்சிகள் - எதிர்பாராத திருப்பங்கள் -

தமிழ், முஸ்லிம் மக்களாகிய - இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அவசர - அவசிய - ஆழ்ந்த சிந்தனைக்கு உரியவை!.

சந்திரிகாவின் அமைச்சரவையில், உள்நாட்டு, சர்வதேச வர்த்தக, வாணிப, கப்பல் துறை, முஸ்லிம் சமய விவகாரம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சராகக் கடந்த எட்டு மாதங்களாகக் கடமையாற்றியவர் ரவூப் ஹக்கீம்!

மிகக் குறுகிய காலத்தில் முஸ்லிம் மக்கள் மத்தியில் மிகப் பெரிய செல்வாக்கைப் பெறும் வகையில் முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுத்த ஜனாப் அஷ்ரப் அவர்களின் 'தோளோடு தோள் நின்று' தொண்டு செய்து தலைவரானவர் ரவூப் ஹக்கீம்!

ஜனாப் அஷ்ரபின் பாரியார் ஜனாபா பேரியல் அஷ்ரப்பைவிட, கட்சியிலும், கட்சியின் அடிமட்டத் தொண்டர்களிடையிலும் அதிக செல்வாக்கைப் பெற்றுள்ளவர் ரவூப் ஹக்கீம்!

மிகத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் மீண்டும் மீண்டும் நாட்டு மக்களுக்குக் கொடுத்த அதிமுக்கியமான வாக்குறுதிகளை உரிய காலத்தில் உண்மையாகவும் நேர்மையாகவும் நிறைவேற்றுவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமலிருந்த சந்திரிகா அரசை -

அவற்றை நிறைவேற்றாமல் விட்டதற்கு - சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி - முன்னுக்குப் பின் முரண்பாடான சில நொண்டிச் சாட்டுக்களைச் சொல்லிச் சமாளிப்பதிற் 'கைவந்த', 'வாய்வந்த' சந்திரிகா அரசை -

இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக அடிக்கடி சொல்லிக் கொண்டே, அதற்கு எதிரான சில 'அதிரடி' நடவடிக்கைகளில் அதிக ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டுள்ள சந்திரிகா அரசை -

தமிழ் மக்களை மட்டுமே தனியாகப் பாதிக்கக் கூடிய - விஷேட - கஷ்டங்களையும் கரைச்சல்களையும் தொல்லைகளையும் விளைவிக்கக் கூடிய - சில நடவடிக்கைகளை எடுத்த சந்திரிகா அரசை -

தலைவர் ஜனாப் அஷ்ரபின் விமான விபத்து மரணம் சம்பந்தமாகப் பல்வேறு ஊகங்களும் வதந்திகளும் நிலவிய சூழ்நிலையில், மரணத்தின் காரணத்தைத் தெட்டத் தெளிவாக - ஐயம் திரிபிற்கு இடமின்றி - வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கிய சந்திரிகா அரசை -

முஸ்லிம் மக்களுக்கு அதிகப்படியான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்ற அதீத நம்பிக்கை காரணமாக -

ஆதரித்து வந்தவர் ரவூப் ஹக்கீம்!

அத்தகைய ரவூப் ஹக்கீமிடமிருந்து தான் -

இருட்டு வேளையிலே தெருக்களிலே நடைபெறும் திருட்டைப் போல் - வழிப்பறிக் கொள்ளையைப் போல் - அமைச்சுப் பதவி அபகரிக்கப்பட்டுவிட்டது!

பறிக்கப்பட்டதற்குரிய காரணங்களாகப் பல சொல்லப்பட்டாலும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கெனத் தனி மாவட்டம் உருவாக்குவது சம்பந்தமாக ஏற்பட்ட கசப்புணர்வும் அதிருப்தியுமே அடிப்படைக் காரணம் என்பதுதான் உண்மை!

முஸ்லிம் காங்கிரஸ்"க்குள்ளே பிளவுகளையும் பிரிவினைகளையும் வளர்ப்பதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசு சார்புச் சக்திகள் மேற்கொண்ட முயற்சி[illegible]ன காரணத்துடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய[illegible] -

முஸ்லிம் மக்களுக்குத் தனி மாவட்டம் அவசியமா? இல்லையா? என்பதோ -

தமிழ் மக்களை அது பாதிக்குமா, மாட்டாதா? என்பதோ -

வேறு விஷயம்!

சிறுபான்மை இனத்தின் தலைவர்கள் விடுக்கும் கோரிக்கைகள், எவ்வளவுதான் நீதியானவையாகவும் நியாயமானவையாகவும் இருந்தாலும் -

அந்தத் தலைவர்கள் அரசுக்கு அளிக்கும் ஆதரவு, எவ்வளவுதான் இன்றியமையாத தாகவும் நீடித்ததாகவும் இருந்தாலும் -

அந்தக் கோரிக்கைகள், பேரினவாதச் சிந்தனைக்கு எதிர்மாறானதாக இருப்பதாக அந்தப் பேரினவாதிகள் சந்தேகப்பட்டால் -

அந்தக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுவது மட்டுமல்லாமல், அந்தக் கோரிக்கைகளை முன்வைத்த கட்சியினருங்கூட ஒதுக்கப்பட்டுவிடுவார்கள்; புறக்கணிக்கப்பட்டுவிடுவார்கள்!

ரவூப் ஹக்கீம் விஷயத்திலும், பேரினவாதிகளின் இந்த எழுதாச் சட்டந்தான் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸ், அரசை விட்டு வெளியேறிய மறுகணமே, மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவை -

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் நோர்வே அரசும் அதன் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் அவர்களும் எடுத்துவரும் பக்கச்சார்பற்ற நடவடிக்கைகளைப் பகிரங்கமாகவே கண்டித்துவரும் ம.வி. முன்னணியின் ஆதரவை -

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றிலும் அழித்து ஒழித்த பின்னரே, இனப்பிரச்சினைக்குரிய தீர்வை பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று சொல்லி வரும் ம.வி.முன்னணியின் ஆதரவை -

இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக அதிகாரப் பரவலாக்கமோ சமஷ்டி அமைப்போ இருக்கக் கூடாது என்பதிலே தீவிரமாக இருக்கும் ம.வி. முன்னணியின் ஆதரவை -

அரசு கோரியிருக்கிறதென்றால் -

அரசின் அந்தரங்க எண்ணம் என்ன என்பதை இனிப் புட்டுக் காட்ட வேண்டிய அவசியமே இல்லை!

தமிழ் மக்கள் - தமிழ்த் தலைவர்கள் - தங்களிடமுள்ள சில்லறை வேறுபாடுகளை மறந்துவிட்டு. புறந்தள்ளி விட்டு ஒன்று சேருவது மட்டுமல்லாமல், மூன்றாவது சிறுபான்மையினராகிய முஸ்லிம் மக்களுடனும் அவர்கள் கைகோர்த்துக் கொள்ள வேண்டும்!

"ஐம்பதுக்கு ஐம்பது" என்ற கோரிக்கை - பெரும்பான்மை இனத்தினருக்கு ஐம்பது சத வீதமான ஆசனங்களும் ஏனைய சிறுபான்மை இனத்தினர் எல்லோருக்கும் எஞ்சிய ஐம்பது சத வீதமான ஆசனங்கள் என்ற கோரிக்கை, ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு விட்ட போதிலும் -

அந்தக் கோரிக்கையை முன்வைத்த திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களே, பின் ஒரு காலத்தில் - தமிழ் பேசும் மக்களின் ஒரு சாராரின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது - அந்த உரிமைகளைப் பறித்த அரசின் ஓர் அங்கமாக இருந்தபோதிலும் -

ஐம்பதுக்கு ஐம்பது என்ற அந்தக் கோரிக்கையின் அடிப்படையாக இருந்த அரசியல் ஞானத்தை தமிழ், முஸ்லிம் தலைவர்கள் நன்கு உணர்ந்து செயற்படத் தவறினால் -

பேரினவாதப் பெரும்பூதம் சிறுபான்மை இனங்களை விழுங்கி ஏப்பம் விடும் என்பதற்கு -

முஸ்லிம் காங்கிரஸ் வெளியேற்றப்பட்டமை, கடைசியாக நடந்த - - நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி - ஓர் உதாரணம் - ஒரு படிப்பினை!

- சித்தன்

### கொழும்புத்துறை மேற்கில்

# மீளக் குடியமர்ந்தவர்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

அரியாலை,ஜூன்24

கொழும்புத்துறை மேற்கில் மீள் குடியமர்ந்த மக்களுக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. விபுலானந்தர் வீதி, கந்தர் மணியம் வீதி, வில்வந்தெரு போன்ற பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கே குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

இந்த வீதிகளில் நிலத்தின்கீழ் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் திருத்தம் செய்யப்பட்டு குடிதண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7-17)

## நாளை

ஆனி 11
திங்கட்கிழமை
திதி: சதுர்த்தி
முன்னிரவு 9.29 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல் 1.25 வரை.
*மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நாள்*
சுபநேரம் : 11.55 - 1.25
ராகுகாலம் : 7.25 - 8.55
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மற்றவர்கள் உன்னைப் பற்றித் தவறாக நினைப்பதற்காகக் கவலைப்படாதே. உன்னால் மற்றவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்றுதான் நீ கவலைப்பட வேண்டும்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



மகளே!
மிதிவெடியில் என்
காலடி பட்டதால்
கைத்தடியில் என்
வாழ்க்கை தஞ்சமடி!

## பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

வடமராட்சி,ஜூன்24

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொட்டடியில் உள்ள சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம - 173)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 - 05 - 1946

உதிர்வு 24 - 06 - 1998

அமரர்

**செபஸ்தியாம்பிள்ளை அலோசியஸ் ஒஸ்வேல்ட்**

*(முன்னாள் வட்டவன அதிகாரியும், ஸ்ரீல.சு.கட்சி - யாழ்.மாவட்டப் பொதுச் செயலாளரும், அ.இ.சமாதான நீதிவானும்)*

அன்னாரது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். ஸ்ரீல. சு. கட்சி பணிமனையில் இடம்பெறும். அத்தருணம் பொதுமக்களையும், ஆதரவாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
ஸ்ரீல.சு.கட்சி,
யாழ்ப்பாணம்.

(C/17213)

## கைதடி மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டம

யாழ்ப்பாணம்,ஜூன்24

கைதடியில் மீள்குடியேறுவது தொடர்பான கூட்டம் ஒன்று நாளை 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் வேண்டுகோள விடுத்துள்ளார். (ம)

## பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்பு

வடமராட்சி,ஜூன்24

கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி நூலகத்துக்கு 25ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியின் பழைய மாணவரான, கனடாவில் வசிக்கும் கந்தையா பாலசுப்பிரமணியம் என்பவரே இந்நூல்களை வழங்கியுள்ளார். (ம-173)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

வலி. தெற்கு,ஜூன்24

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையம் நடத்தும் முன்பள்ளிக்கான விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோயிலடியில் நடைபெறும்.

ஐயனார் சனசமூக நிலையத் தலைவர் த.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-152)

## தண்ணீர்த்தொட்டி கையளிப்பு

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு ஆயிரம் லீற்றர் தண்ணீர் கொள்ளக் கூடிய பிளாஸ்டிக் தொட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.இராஜசிங்கம் இதனை ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் கையளித்தார். (ஒ-173)


## ATALS பல்கட்டும் நிலையம்

MEDICLINIC, MANIPAY.



தரமான பல்கட்டுதல (**JAPANISH TEETH**) மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்படும் மிதப்பை நிவர்த்தி செய்வதற்குரிய **ORTHONTICS PLATE CLIP** பொருத்தப்படும்.

Time:-

தினசரி காலை 6.30 தொடக்கம் 12.30 வரை

**T.KULASINGAM.**

(89278)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணில் 12 - 12 - 1948

விண்ணில் 01 - 06 - 2001

அமரர்

**செல்வநாயகம் சற்குணானந்தன்**

(வீனஸ்)

01-06-2001 அன்று அமரரான எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள்.

*இல.11, பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.*

(89327)


மாலைத் தாரகையுடன் ஒன்று சேர்ந்து காலைக் கதிரில் கண்விழிக்க.

ரொக்லண்ட் திரீஸ்டார் ★★★

ரூ.255/—







ரூ.75/— ரூ.130/— ரூ.255/—

மறுநாளில் உடலை வருத்தாத தோழன்.

75 ஆவது ஆண்டின் சிறப்பு.

(C/17165)

தயாரிப்பு
ரொக்லன்ட் டிஸ்டிலரீஸ் லிமிட்ட

விநியோகஸ்தர்:

வாமாஸ் வைன் ஸ்ரோர்ஸ் 148/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# நவீன இலக்கிய உலகில் சிறுகதை, நாவல், நாடகம்

இன்று பல்கலைக்கழகம் வரை நவீன இலக்கியங்களான சிறுகதை, நாடகம், நாவல் ஆகியவை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களை மனதில் கொண்டே இக்கட்டுரையை எழுதியுள்ளேன். அந்த இலக்கியங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனிக் கட்டுரைகள் எழுதினால் விடியும். கூறியது கூறல் என்ற குற்றமும் வருமானத்தினால், அவை மூன்றையும் ஒரே கட்டுரையில் அமைத்து, சொற்செட்டுடன் சுருக்கமாக எழுதியுள்ளேன். மாணவர்கள் ஒரே பார்வையில் அவற்றை ஒப்பிட்டுப் படித்து அவை ஒவ்வொன்றினதும் குணாம்சங்கள் சிறப்புகளையும், அவற்றிற்கிடையிலுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளையும் அறிந்து கொள்ளலாம்.

சிறுகதை, நாவல், நாடகம், புதுக்கவிதை என்ற நவீன இலக்கியங்களை எழுதுவதற்கு எந்த விதக் கட்டுப்பாடுகளோ, சட்டதிட்டங்களோ கிடையா. அப்படி ஏதும் இருப்பதாக யாராவது கூறினால், அது அபத்தம்! (nonsense). ஆனால் நீண்ட காலமாக அந்த நவீன இலக்கியங்களைப் படைத்து வந்த எழுத்தாளர்களும், அவற்றை ஊன்றிக் கற்றுவந்த அறிஞர்களும் தத்தம் அனுபவங்களிலிருந்து சில அழகுகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். எழுதாவிதிகளான அச்சம்பிரதாயங்களை அவர்கள் எழுதிவைத்துவிட்டும் சென்றுள்ளனர். அவை ஏனையோருக்கும் பயன்படட்டும் என்று அந்த மரபுகளைப் பின்பற்றி எழுதினால் நவீன இலக்கியங்கள் அழகாக அமையும்.

**சிறுகதை**

சிறுகதை அதன் பெயருக்கேற்ப சிறியதாகவே இருக்கும். அதை ஒரே மூச்சில் படித்து முடிக்கலாம் என்பர். அதை ஒரே மூச்சில் எழுதியும் விடலாம். கதைப் பின்னல் (Plot) என்று பெரிதாக எதுவும் இல்லாவிட்டாலும் சிறுகதையில் ஒரு சிறிய கதையாவது இருக்கும். ஒன்று முதல் ஐம்பது பக்கங்கள் வரை நீளுகின்ற சிறுகதைகள் உளறலாயினும் சிறியதாக இருப்பதே சிறுகதைக்கு அழகு!

ஒருமைப்பாடே சிறுகதையின் பிரதான அம்சம். ஒரு பாத்திரம், ஒரு குணசித்திரம், ஒரு சம்பவம், ஓர் உணர்ச்சி - என்று ஏதோ ஒன்றைப் பற்றியே சிறுகதை எழுதப்படும். அந்த ஒன்றை விட்டு விலகினால் அதன் அழகு குன்றும்.

சிறிய கதையாதலால் ஒரு சில பாத்திரங்களே வரும் என்பது சொல்லாமலே பெறப்படும். ஒரு பாத்திரத்தை வைத்தே சிறுகதை எழுதி விடலாம். புராண இதிகாச பாத்திரங்களையும், தேவகாந்தார உலகத்து மனிதர்களையும் வைத்துச் சிறுகதை எழுதுவதை விட நாம் வாழும் இந்த நிஜஉலக மனிதர்களைப் பாத்திரங்களாக வைத்து எழுதுவதே சிறந்தது. அப்பொழுதுதான் அந்தக் கதையில் வாசகர்களுக்கு ஓர் அர்த்தம் புரியும். வெறும் கற்பனைக் கதைகளிலும் நிஜமாந்தரைப் போலல்லாத பாத்திரங்களிலும், வாசகர்கள் அக்கறை கொள்ள மாட்டார்கள்.

கதை எந்த இடத்தில் நடக்கிறதோ அந்த இடத்தில் வாழுகின்ற மக்களது பேச்சு வழக்கிலேயே உரையாடல் அமைவது கதைக்கு ஒரு நம்பகத் தன்மையைக் கொடுக்கும்.

சிறுகதையில் நீண்டவர்ணனைகளுக்கு இடமில்லை.

கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், நல்ல கருத்துக்களைச் சொல்லாது விட்டாலும், பிழையான கருத்துக்களைச் சொல்லாமல் இருப்பது நல்லது.

சிறுகதையில் வெளிப்படையாகச் சொல்லும் பகுதி சிறியதாகவும் சொல்லாமல் சொல்லும் பகுதி பெரியதாகவும் இருக்கும்.

வாசித்து முடித்த பின்பும் நெஞ்சில் நின்று ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கதையே சிறந்த சிறுகதையாகக் கொள்ளப்படுகின்றது.

**நாடகம்**

நாடக வகைகள் இன்று பல்கிப் பெருகிவிட்டன. எழுத்துரு (Seript) இல்லாமலே நடிக்கப்படும் நாடகங்களும் வந்து விட்டன. இருந்தாலும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றதாக இலக்கிய நயத்துடன் எழுதப்படும் நாடகங்களே நல்ல நாடகங்கள் என்று கருதப்படுகின்றன. அத்தகைய நாடகங்களை கருத்தில் கொண்டே இக்கட்டுரையை எழுதியுள்ளேன்.

சிறு கதைக்குக் கூறப்பட்ட லட்சணங்கள் எல்லாம் நாடகத்திற்கும் குறிப்பாக ஓரங்க நாடகத்திற்கும் வானொலி நாடகத்திற்கும் பொருந்தும்.

நாடகத்திற்கு ஒரு கதைத் திட்டம் (Plot) இருப்பது அவசியம். நாடகத்தின் எல்லா அம்சங்களையும் இணைத்து வைத்திருப்பது அதுவே. அதன் வளர்ச்சியே நாடகத்தின் வளர்ச்சியாகும்.

சிறுகதைக்கு ஒரு குறிப்பிட்ட உருவம் இல்லை. ஆனால் நாடகத்திற்கு ஒரு குறிப்பிட்ட வடிவம் இருப்பது அவசியம். நாடகம் தொடங்கும் பொழுதே ஒரு பிரச்சினையும் (Conflict) தோன்றும். பிறகு அது இறுகி வளர்ந்து உச்ச நிலை எய்தும். சிக்கல் மெல்ல மெல்ல அவிழ நாடகம் இறங்கிச் சமநிலையை வந்தடையும். இந்த மாதிரியான அமைப்பு இல்லாவிட்டால், நாடகத்தில் சூடு பிடிக்காது, விறுவிறுப்பும் வந்து அமையாது, சுவை குன்றும்.

**அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

ஊடகம் எதுவாயினும் குறிப்பிட்ட நேரத்தில் நடித்து முடிக்கப்பட வேண்டிய நாடகத்தில் அளவுக்கு அதிகமான பாத்திரங்களைப் புகுத்துதல் சிலவேளைகளில் குழப்பத்தை ஏற்படுத்திக் கதை ஓட்டத்தையும் தடை செய்யும். வானொலி நாடகத்தில் அது நிச்சயம் குழப்பத்தை ஏற்படுத்தும். புராண இதிகாசக் கதை மாந்தர்களையும் மிருகங்கள், மரம், தடி, கொடிகளையும் பாத்திரங்களாக்கி நாடகம் எழுதுவதை விட நாம் வாழுகின்ற இந்தச் சமூகத்துக் கதையையே எடுத்துக் கொண்டு, நாம் சமூகத்தில் சந்தித்துப் பேசி உறவாடுகின்ற மனிதர்களையே பாத்திரங்களாக்கி நாடகம் எழுதுவதே சிறந்தது. அப்பொழுது தான் பார்வையாளர்கள் நாடக மாந்தருடன் ஒன்றி நின்று அவர்களது சுக துக்கங்களில் பங்குகொள்வது நாடகரசனையும் சிறக்கும்!

நாடகத்தில் எல்லாமே உரையாடல் மூலம் செய்யப்படுகின்றமையினால் உரையாடல் மிகுந்த எச்சரிக்கையுடன் எழுதப்படவேண்டும் என்பது சொல்லாமலே பெறப்படும். சொல் செட்டு மிக மிக அவசியம். நாடகம் எந்த இடத்தைக் களமாகக் கொண்டு எழுதப்படுகின்றதோ அந்த இடத்தில் வாழும் மக்களது பேச்சு வழக்கு மொழியில் உரையாடல் எழுதப்பட்டால்தான் பாத்திரங்கள் உயிர்த்துடிப்பு உள்ளனவாகத் திகழும். அது உண்மையாகவே நடந்த கதை என்ற உணர்வு நாடக ரசிகருக்கும் ஏற்படும். இந்த உணர்வு நாடக ரசனையை அதிகரிக்கும்.

வேகமாக ஓடும் நாடகத்தில் நடப்பது எல்லாம் - பேசுவது எல்லாம் ரசிகர்களுக்கு இலகுவில் விளங்க வேண்டும். இல்லையென்றால் அலுப்படிக்கும்; பார்வையாளனது கவனம் சிதைவுறும். நல்ல சிறுகதையைப் போலவே நல்ல நாடகமும் பல விடயங்களைக் குறிப்பால் உணர்த்தும். அப்படிச் சொல்லாமல் சொல்லும் விடயங்கள் கூட, நாடகத்தில் நடிப்பாற்றிலிருந்து ரசிகனுக்குத் தானாக விளங்க வேண்டும். இல்லையென்றால் அங்கு நாடகாசிரியன் தோற்றுப் போகின்றான்! உங்களுக்கு இலகுவில் விளங்காது. நான் சொல்வதைக் கேளுங்கள். என்ற பாணியில் நாடகாசிரியன் குறுக்கே வந்து பேசுவது நாடக ரசிகர்களை அவமதிக்கும் செயல்!

**நாவல்**

கடந்த 200 ஆண்டுகளாக ஐரோப்பிய மொழிகள் எல்லாவற்றிலும் நாவல் இலக்கியமே அரசோச்சி வருகின்றது. இலக்கியத் துறையில் தற்காலம் நாவல் இலக்கியத்தின் காலம். தமிழ் மொழியிலும் ஆயிரக் கணக்கான நாவல்கள் எழுதப்பட்டு விட்டன. இலங்கையிலும் பல நல்ல நாவல்கள் எழுதப்பட்டுள்ளன.

நாவல் என்பது ஒரு நீண்ட கதைதான். ஆனால் அதற்குத் தனியான முத்திரை உண்டு.

நாவல் நிஜ உலகின் சாயலில், எழுத்தாளன் படைத்துள்ள இன்னொரு கற்பனை உலகம். அதில் வரும் கதை மாந்தரும் உண்மையான மனிதர்களது சாயலில் வார்த்தெடுக்கப்பட்ட கற்பனை மனிதர்களே. எந்த நாவலிலும் ஒரு கதைப் பின்னல் (Plot) இருக்கும். அதற்கு அமையவே எழுத்தாளன் கதையை எழுதியிருப்பான். நாவலின் கதை கவிதை நடையில்லாது, எல்லோருக்கும் எளிதில் விளங்கத் தக்க எளிய உரை நடையில் எழுதப்பட்டிருக்கும்.

எழுத்தாளனுக்குப் பூரண சுதந்திரம் அளிப்பது நாவல். அவன் எதையும் எழுதலாம்; எப்படியும் எழுதலாம். நாவலில் ஒன்றும் வரலாம். பலவும் வரலாம். அதில் வரக்கூடிய கதைகள், கதைப் பின்னல்கள், பாத்திரங்கள், வாழ்க்கை விளக்கங்கள், வர்ணனைகளுக்குக் கணக்கே இல்லை!

இலக்கியம் வாழ்க்கையில் இருந்து முகிழ்த்தெழுவது, வாழ்க்கையைத் திறம்படச் சித்தரிப்பது, வாழ்க்கைக்குச் சிறந்த விளக்கங்கள் கொடுப்பதுடன், அதற்கு வழியும் காட்டுவது என்ற கூற்று, இன்றைய நவீன இலக்கியங்களில் நாவலுக்கே கூடுதலாகப் பொருந்தும். அதனால்தான் நாவல் இக்காலத்தின் காப்பியம் என்று பாராட்டப்படுகிறது. அன்று காப்பியங்கள் செய்த பணியை இன்று நாவல்கள் செய்கின்றன!

நாவலின் அம்சங்களான கதை, கதைப் பின்னல், பாத்திரப் படைப்பு, வாழ்க்கை விளக்கங்கள், சூழ்நிலை சித்திரிப்பு, வர்ணனைகள் - எல்லாம் இருந்தால் மட்டும் ஒரு நூல் நல்ல நாவலாகிவிடாது. மேலே கூறப்பட்டுள்ள அம்சங்கள் எல்லாவற்றையும் உரிய அளவில் கலந்து நாவலுக்கு ஒரு வடிவமைப்பும் கொடுத்து, எல்லோருக்கும் இலகுவில் விளங்கக் கூடிய எளிய, இனிய மொழிநடையில் எழுதப்படவும் வேண்டும். அத்தகைய நாவல்களே சிறந்த நாவல்களாகக் கருதப்படுகின்றன. ★



பிரிட்டிஷ் தூதர் லிண்டா டபீல்ட் அம்மையார் யாழ்.பொது நூலகத்துக்கு விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படம்.
தூதருடன் பிரிட்டிஷ் தூதரக பாதுகாப்பு அதிகாரி மற்றும் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.மாநகர சபை பதில் ஆணையாளர் வே.குலநாயகம் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ)

## வெளிச்சங்கள் ஏறுமோ?

வடக்கிலே அபிவிருத்தி ~ எங்கள்
வீடுகளில் இருள் விருத்தி!
அந்தோ கேள் ~ யாழ்ப்பாணத்தில்
இரவிலும் 'ஏசி'.
இதோ பார் ~ மின்குமிழ்கள்
கரண்டில்லாத[illegible]ம்.ரீ'!
குப்பிவிளக்கில் படித்தார்கள்
எடுத்தார்கள் பல 'டி' ~ இன்று
நின்று நின்று ஒளிவந்து
மிஞ்சியது தலை'யிடி'!

தேர்தல் கூட்டங்களிலே
'நில்லாது முழுநேர மின்சாரம்'
இன்றோ ~
'நின்றால் தான் அது மின்சாரம்'
கையைக் கேட்டால்
கண்ணில் பிழை என்பான்
கண்ணைக் கேட்டால்
மூளையில் பிழையென்பான்
மூளையைக் கேட்டால்
'இரண்டறை பழுது' ~ என்று
இழுபட்டுப் போகும்
இந்நிலை மாறுமோ?
வெளிச்சங்கள் எங்கள்
வீட்டினில் ஏறுமோ?

*- முத்துமாரி -*

## பார்த்தோம்! பரிதவித்தோம்!!

வீடு வாசல் வாழ்விடங்கள் பார்த்திடவே
வீறு கொண்டே விரைந்து சென்றோம்
காலம் வருடமாகிக் கழிந்து போனபின்
காட்சிகள் கண்டோம் கலக்கம் கொண்டோம்

தேடிய செல்வம் எடுத்திடச் சென்றோம்
தேட முடியாது இருக்கக் கண்டோம்
கூடு குலைந்த குருவிகள் போலவே
குந்தி இருக்க இடமின்றி நின்றோம்!

ஊரது போரால் அழிந்திடக் கண்டோம்
ஊர் பேர் அறியாக் கள்வரைக் கண்டோம்
ஊரவன் பார்த்திட வந்தவன் போனவன்
எரிகிற வீட்டில் பிடுங்கியே சென்றான்

பாடிய பறவைகள் துயரொலி கேட்டோம்
வாடி வதங்கிய மரஞ்செடி பார்த்தோம்
கூறைச் சேலைகள் (சென்ரிக்) கூறையிடக் கண்டோம்
சூறையாடிய எம் சொத்துக்கள் எங்கே? எங்கே?

கல்விக் கூடங்கள் கடவுள் உறை ஆலயங்கள்
நல்வித்தை பயிற்றும் கவின்கலை அரங்குகள்
செல்பட்டுடைந்த சீரழிவைக் கண்டு
சொல்லொணாத் துயரில் மூழ்கியே நின்றோம்

பக்குவமாய் சேர்த்த அருந்தமிழ் நூல்களும்
எக்காலும் பெறமுடியா உயர்கல்விச் சான்றிதழும்
சுக்கு நூறாகி மழைநீரால் நனைவுற்று
உக்கிப் போனதால் உளம் வாடுகின்றோம்.

சோலை வனமாகச் செழிப்புற்ற நமதூர்
பாலை வனமாக மாறியே கிடக்குதையா!
சொர்க்கமாக நாம் வாழ்ந்த வாழ்க்கையின்று
நரகமாகிப் போனதனால் எதிர்காலத்திற்காய்
ஏங்குகின்றோம்!

*மு.வே. அன்பழகன்*
மட்டுவில் தெற்கு.
*(தென்மராட்சி சென்று திரும்பிய பின் வடித்த கவி)*

## கண் பார்வையற்றோருக்கான போட்டிகள்

கோண்டாவில்,ஜூன்24

கண்பார்வை அற்றவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் கட்புலன் பாதிப்புற்றோர் புனர்வாழ்வு நிலையத்தினால் கவிதை, கட்டுரை, சிறுகதைப்போட்டிகள் நடத்தப்பட உள்ளன..

கண்பார்வை அற்றவர்களின் ஆககங்களை உள்ளடக்கிய சஞ்சிகை ஒன்றும் விரைவில் வெளியிடப்படவுளளது.

போட்டிக்கான இறுதித் திகதி அடுத்த மாதம் 10ஆம் திகதி ஆகும். ஆக்கங்களை கட்புலன் பாதிப்புற்றோர் புனர்வாழ்வு நிலையம், சமூக சேவைகள் திணைக்களம், கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு முதலாம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும், 2ஆம் பரிசாக 3ஆயிரம் ரூபாவும், 3ஆம் பரிசாக 2ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. ஐநூறு ரூபா கொண்ட பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சமூக சேவைகள் உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-86)

உ

கொக்குவில் - நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்**

*நிகழ்ச்சி நிரல்*

| | | | |
|---|---|---|---|
| 25-06-2001 | திங்கட்கிழமை | கொடியேற்றம் | - பகல் 10 மணி |
| 01-07-2001 | ஞாயிற்றுக்கிழமை | கைலாய வாகனம் | - மாலை 4.30 மணி |
| 03-07-2001 | செவ்வாய்க்கிழமை | சப்பறத் திருவிழா | - மாலை 4.30 மணி |
| 04-07-2001 | புதன்கிழமை | தேர்த்திருவிழா | - காலை 7.30 மணி |
| 05-07-2001 | வியாழக்கிழமை | தீர்த்தோற்சவம் | - காலை 6.30 மணி |
| 06-07-2001 | வெள்ளிக்கிழமை | பூங்காவனம் | - மாலை 4.30 மணி |

செயலாளர்,
*ஆலய பரிபாலன சபை.*

(89369)



**கொழும்பில் தங்குமிட வசதி**

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும், சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில், **No: 89, HINNY APPUHAMY MAWATHA, CO.-13** இல் அமைந்துள்ளது **"VANI INN"**, லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவுசெய்து வரலாம். மேலதிக விவரமறிய: **T.P: 01-433182, 472582**

(88723) - முகாமையாளர்.


## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கக் கிளைக்குழுக்களின் தலைவர், செயலாளர், உபதலைவர் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 10மணிக்கு சங்கத்தின் கோண்டாவில் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-10)

## பாடசாலைகளில் கணிப்பீட்டுக் குழுக்கள்

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நடவடிக்கைகளைச் சீராக்கும் முகமாகக் கணிப்பீட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை அதிபரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்படும் இக்குழுவில் மாணவர் தொகைக்கேற்ப பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளடங்குவர். முக்கியமான வழிப்படுத்தலைச் செய்வதற்கென சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஒருவரும் இக்குழுவில் இடம்பெறுவார்.

மாதாந்தம் ஒன்றுகூடும் இக்குழு கணிப்பீடு தொடர்பான முன்னேற்றங்களை மதிப்பீடு செய்யும எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-27)

## தமிழ் இலக்கியப் பாடநூல் இன்றி மாணவர் சிரமம்

தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள விருப்பத்துக்குரிய பாடங்களில் ஒன்றான 'தமிழ் இலக்கியம்' பாடநூல் இல்லாததால் மாணவர்கள பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தரம் 10,11 ஆகியவற்றுக்கான இப்பாடநூல் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இலக்கிய விடயங்களைப் பாடநூல் இன்றிப் படிக்க முடியாது என்பதால் மாணவர்கள் பெரிதும் சிரமமுறுகின்றார்.

வசதி குறைந்த மாணவர் 'போட்டோ பிரதி'எடுத்து படிக்க முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-27)

## வீதி திருத்த வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

நீண்ட காலமாகத் திருத்தப்படாமல இருந்த வட்டுக்கோட்டை கள்ளி வீதி, பண்ணாகம் விசவத்தனை முருகன் கோயிலுக்குச செல்லும் பிரதான வீதி, அராலி வண்ணபுரம் சிவன் கோயில் வீதி ஆகியவற்றின் திருத்த வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

சித்தன்கேணி பிரதான வீதியில் 'சுப்றா' கல்வி நிலைய வீதியும் நீண்ட காலத்தின் பின்னர் விரைவில் திருத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ)

## குருநகரில் கசிப்பு ஒழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்24

குருநகர்ப் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குருநகரிலுள்ள ச.ச.நிலையங்களின் இணையம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மனித முன்னேற்ற நடு நிலையம் போன்ற அமைப்புகள் இணைந்து இந்தப் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. (க-5)

## நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு,ஜூன்24

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் புனரமைப்பு வளர்ச்சிக்கென ஐந்து லட்சம் ரூபா நிதியை வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது அமைச்சு நிதியில் இருந்து வழங்கியுள்ளார். (க-152)

**துயர் பகிர்கின்றோம்**

எமது துறையின் 2ஆம் வருட மாணவியான
செல்வி ச.வினோதாவின் அன்புத் தாயார்

**திருமதி சண்முகராசா சிவசக்தி**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவதுடன், பிரிவுத் துயரத்திலும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(89350)

**கண்ணீர் அஞ்சலி**

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு தன்னையே
அர்ப்பணித்து மறைந்த

**அமரர் பொன்.சபாபதி**

(ஓய்வுபெற்ற கிளி-மாவட்ட கல்விப் பணிப்பாளரும் தற்போதைய
வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின்
வன்னிக்கான இணைப்பாளரும்)

கிளி-மாவட்டத்தில் 33வருடங்களாக, கல்வித்துறைக்கு சேவையாற்றி மறைந்த அன்னாருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவரின குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கிளி/மாவட்ட மாணவர் ஒன்றியம்;*
*யாழ்/பல்கலைக்கழகம்.*

(89356)


Robin Lemon றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் Robin Lemon

Robin Lemon Robin Lemon Robin Lemon

**வாடிக்கையாளர்களுக்கு.....**

**நற்செய்தி!**

3 WRAPPERS




**3 றொபின் லெமன் சவர்க்கார உறைகளை**
**உங்கள் வியாபாரியிடம் கொடுத்து**
**ஒரு சவர்க்காரக் கட்டியை**
**இலவசமாகப் பெறுங்கள்!**

**வெண்மையான சலவைக்கு**
**லெமன் வாசனை கலந்த**
**"றொபின் சோப்"பையே உபயோகியுங்கள்.**

(89059)

Robin Lemon றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் Robin Lemon

# நாளை மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். சைவ பரிபாலன சபையினர் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் அனுசரணையுடன் இந்த நிகழ்வுகள் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசைத்தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கச்சேரி — நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

★ ★ ★

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இந்துமாமன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள திருவாசக விழாவும், மணிவாசகர் தினமும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் ரதிலஷ்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்துமாமன்றத் தலைவர் சி. ரூபன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் 'செஞ்சொற் செல்வர்' ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சொற்பொழிவு, புராண படனம், நாடகம் என்பனவும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு உடுவில் சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-7-152)

# வவுனியாவில் சிறுவர்களுக்கு தமிழ்க்குழு ஆயுதப் பயிற்சி!

## இராணுவத் தரப்புத் தகவல்

வவுனியா, ஜூன் 24

வவுனியாவில் இயங்கும் தமிழ்க் குழுக்கள் சிறுவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து தமிழ்க் குழு ஒன்றின் முகாமைச் சோதனை செய்ததாகவும்—

அங்கிருந்து 13 வயதுடைய கே. குமாரதாஸன் என்ற சிறுவன் மீட்கப்பட்டுள்ளதாகவும்—

சந்திரசேகரன் (வயது 08)
ரவிச்சந்திரன் (வயது 12)
ஆகியோர் காணாமற் போயுள்ளனர் என்றும் —

அவர்களைத் தேடும் பணி தற்சமயம் இடம்பெறுகின்றது என்றும்—படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

(க-3)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் கு. கணேசலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-10)

## இன்று

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் 'சமுதாயத்தில் ஆண்கள், பெண்களுக்கான சமவாய்ப்பு' என்ற கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரெட்ணம் பிரதம விருந்தினராகவும். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஐ-7)

★ ★ ★

ஊரெழு கலைவாணி முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஈ.பி.டி.பியின் வலி கிழக்கு அமைப்பாளர் ஏ. ரவி இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## ஒன்றுகூடல்

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு கிரிக்கெட் போட்டியொன்றும் நடத்தப்படவுள்ளதாகக் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

# சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 5 மணிதொடக்கம் 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகன் 'விநாயக புராணம்' என்று பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

(ஐ-7)

★ ★ ★

வண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப்பிள்ளையார் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெவுள்ளது.

(ஐ-7)

★ ★ ★

புங்குடுதீவு சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயத்தின் பிராயச்சித்த மகாகும்பாபிஷேகம் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(ஐ-7)

★ ★ ★

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம்திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-7-152)

கொக்குவில் — நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-7-69)

★ ★ ★

அல்வாய் குமிழடி விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை சதுர்த்திப் பூஜையும் விசேட கூட்டுப் பிரார்த்தனையும் சமயச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி வித்தகம் அன்பர்களால் கூட்டுப் பிரார்த்தனையும், வித்தகம் குரு பரமசாமி அவர்களால் சமயச் சொற்பொழிவும் நடத்தப்படும். (ம-117)

## கழிவுகளால் துர்நாற்றம்

திக்கம் வடிசாலை கழிவுகள் இப்பகுதியில் உள்ள கடற்கரைப் பகுதியில் கொட்டப்படுவதால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுகின்றது.

கடற்கரை அருகே உள்ள வீதியில் செல்பவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்லும் அளவுக்கு துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கழிவுகள் கடலில் கலந்து அவற்றை உண்ணும் மீன்கள் இறந்து மிதப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

# நகரசபைத் தலைவருக்கு தனிச் சிங்களத்தில் கடிதம்

## அதனைத் திருப்பி அனுப்பினார் அவர்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் தனிச் சிங்கள மொழியில் தமக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றை சாவகச்சேரி நகரசபைத் தலைவர் பெ. தனபாலசிங்கம் திருப்பி அனுப்பியுள்ளார்.

தனிச் சிங்களத்தில் — தமிழ் மொழி பெயர்ப்பின்றி அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தை அறிய முடியாமல் இருப்பதாகவும் —

மேற்படி கடிதத்தின் தமிழ்ப் பதிப்பையோ மொழிபெயர்ப்பையோ அனுப்பி வைக்கும் படியும்—

நரகசபைத் தலைவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிரதியை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு—கிழக்கு தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சருக்கும்அவர் அனுப்பி வைத்துள்ளார்.

(ஓ)

## லயன்ஸ் கழகக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306 பி பிராந்தியம் 9. 10க்குரிய நடப்பு வருடத்திற்கான திட்டமிடல் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொக்குவில் இந்துக்கல்லூரிஹன்டி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிராந்தியத் தலைவர்கள் லயன் ஆர். நடராஜா மற்றும் லயன். செ. ஞானராஜா ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

இந்தக்கூட்டத்தில் கொக்குவில், இணுவில், சுன்னாகம், மானிப்பாய் கோவில்பற்று, மானிப்பாய் வட்டம், கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், வடமராட்சி, சாவகச்சேரி, தீவகம், வட்டுக்கோட்டை ஆகிய லயன்ஸ் கழக நடப்பு வருட தலைவர்களும் ஏனைய பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளனர்.

(க)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூன் 24

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிகெட் சங்கத்தினால் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 15, 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான கிரிகெட் சுற்றுப் போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்).

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி. (விக்டோரியாக் கல்லூரி மைதானம்).

### 17 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி. (மகாஜனக் கல்லூரி மைதானம்).

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக் கல்லூரி. (கனகரத்தினம் ம. ம. வி. மைதானம்).

(க-86)

# இறுமாப்புக் கொண்டவர்கள் இறைவனால் தகர்த்தெறியப்படுவர்

கடவுள் தம் அன்பை வெளிப்படுத்தியதன் அடையாளமே இவ்வுலகமாகும். இறைவனின் அன்புக்கு ஒன்றும் ஈடாகாது! என்பதற்கு உலகமே சான்றாகும். மனிதன் எவ்வளவு பெரிய ஆற்றல் உள்ளவனாக இருந்தாலும் அவன் இறைவனாக முடியாது. இறைவனின் மாபெரும் வல்லமைமுன்னே நாமெல்லாம் தூசுகள். ஆயினும் துரும்பையும் தூசையும் மிகப்பெரிய காரியங்களை ஆற்றச் செய்ய இறைவன் வல்லவராக இருக்கின்றார்.

இறுமாப்பு உள்ளவர்கள் இறைவனாலே தகர்த்தெறியப்படுவார்கள் இறைவனின் பணியாளர்கள் ஒவ்வொரு மனிதனையும் உண்மைக் கிறிஸ்துவுக்கு அறிமுகம செய்யும் முதற்பணியைக் கொண்டவர்களாக விளங்க வேண்டும்.

அநீதச் செயற்பாடுகளை ஆதரிப்பது தவறான செயலாகும். உண்மைக்குச் சான்று பகர்ந்து, நீதிக்கு குரல் கொடுத்து, திருச்சபையை வளர்க்கப் பாடுபடுபவர்களே இறைவன் விரும்பும் அர்ப்பணிப்புள்ள பணியாளர்கள். இறை திட்டத்தை நிறைவேற்றக் கற்று கொள்ளும் நாளே பூமியில் எம் அழைப்பை நாம் முழுமையாக நிறைவேற்றும் நாளாகும்.

ஒன்றிப்பு எங்குள்ளதோ அங்கே வளர்ச்சியுண்டு, கீழ்ப்படிதல் எங்குள்ளதோ அங்கே இறையருள் பெருகும். பாசாங்குத்தானமும் அதிகார வெறித்தனமும் எங்குள்ளதோ அங்கே இறைவனின் கோபக் கனலான பார்வை சுட்டெரிக்கும். தலைவனின் வார்த்தைக்கு கீழ்ப்படியாது தாலந்துகளைப் பெற்றவர்கள் தலைவனின் பணியிலும் மகிழ்விலும் பங்கு கொள்ள அருகதையற்றவர்கள்.

### ஞாயிறு நற்பிரசாதம்

தூய ஆவிக்கு எதிராகச் செயற்படும் பாவங்கள் மன்னிக்கப்படமாட்டாது. ஏனென்றால் உலகப் படைப்பின் காலம் முதல் இன்று வரை செயலாற்றிக் கொண்டு வருபவர் அந்த வல்லமையுள்ள இறை ஆவியானவரே. ''ஆகையால் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம், கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள, நாம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் வழியாய், கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம்.''

(உரோ.5:1).

துன்பத்தால் மனஉறுதியும், மனஉறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையுமென அறிந்திருக்கின்றோம். அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது; ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

பணத்திலும் அநீதத்திலும் இறுமாப்பு அடைபவர்கள் உலகத்தின் மாயக் கவர்ச்சிகளுக்குள் அகப்பட்டு ஆவியானவரின் செயற்பாடுகளுக்கு எதிரான ஊன் இயல்பிவ் நாட்டங்களை நாடிச் செயற்படுகின்றவர்களாகக் காணப்படுவர். அவர்களிடம் இருந்து நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாது. அநீதியானவற்றை நியாயப்படுத்துவர் இவர்கள் நிச்சயமாக இறைவனின் தீர்ப்புக்கு ஆளாவார்கள்.

எனவே இறைவன், காலத்தின் அறிகுறிகள் மூலமும், நடைபெறும் சம்பவங்கள் மூலமும் நாம் விழிப்புடன் செயற்படவேண்டும் என்றுஅழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் விவேகமுள்ள கன்னியர்களாகவும், பெற்றுக்கொண்ட தாலந்துகளை பயனுள்ள வகையிலே பயன்படுத்துகின்ற இறை அரசைக் கட்டியெழுப்புகின்ற பணியாளர்களாகவும் வாழ்ந்திட உண்மையின் ஆவியானவரின் வழிகாட்டுதல்களைத் தொடர்வோம். வாழ்வைப் பெறுவோம். ★

சகோதரன்
அன்ரனி பீற்றர்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆனந்தா சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நிகழுமா? வெளிநாடு போகலாமா? நோய்கள் நீங்குமா? காரியம் கைகூடுமா? கேட்டுப்பாருங்கள்! விவரங்களுக்கு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89334)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி **(BROILERS)**, கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:-இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (89085)

**Broilers, Cullbirds, Cockerels soup** குஞ்சு இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (89199)

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. புறொயிலர் **1Kg** விலை **160/=**, கல்பேட்டின் விலை **140/=** சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். குணம் கொத்துறொட்டிக் கடைக்கு அடுத்த வீட்டில். இல. 334, கே.கே.எஸ். வீதி, சிவன் கோயிலடி. வாடிக்கையாளர்களுக்குக் கழிவு உண்டு. (89323)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89191)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973இல் பிறந்த பாவம் குறைந்த பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி உத்தியோகம் பார்க்கும் மணமகனை உள்நாட்டில் எதிர்பார்க்கின்றோம். சாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: விள. இல.1309, மே/பா. உதயன். (89373)

## A/L பௌதிகவியல் (2002, 2003)

பௌதிகவியல், இணைந்த கணிதம் பலவருட அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகச்சிறப்பாக ஏராளமான **A/L** பயிற்சிகளுடன் முழுப் பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு:- 3 மணிக்குப்பின், **R**.சுப்பிரமணியம் **17/1**, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (89362)

## தவறிவிட்டது

காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியைச் சேர்ந்த தவராசா விஜிகரன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0902028991), சாரணர் அ.அட்டை என்பன கல்வியங்காட்டுச சந்திக்கும் கொக்குவிலுக்கும் இடையில் 17.6.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (89359)

**15/7**, முருகேசர் வீதி நல்லூரைச சேர்ந்த தவபாலசிங்கம் ஞானேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.487167152**V**), விசேட அ.அட்டை (இல.0902018304) என்பன 16.6.2001 அன்று முத்திரைச் சந்தைக்கும், யாழ். பஸ் நிலையத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (89358)

97 ஸ்ரீ 3039 இலக்கம் உடைய மோட்டார் வாகன அனுமதிப் புத்தகம் 14.06.2001இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுரேஸ் பற்றறிசார்ஜ், மல்லாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (89376)

## பிரத்தியேக வகுப்பு

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக வணிகக்கல்வியும் கணக்கீடும் பாடத்தில் **Distinction** சித்தி பெறத் தக்க முறையில் கற்பிக்கப்படும். மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் மீட்டல் பரீட்சைகளும் நடத்தப்படும். குழுவாகவோ, தனியாகவோ, அல்லது தனியார் நிலையங்களிலோ கற்பிக்கப்படும். விண்ணப்பிக்கவும். விள.இல:- 1308, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89360)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஆங்கில தட்டச்சுக்கள் இரண்டு உடன் விற்பனைக்குண்டு. இல.1201, காங்கேசன் துறை வீதி, நாச்சிமார் கோயிலடி. (89333)

கொழும்பில் இருந்து பொருள்கள வந்த வெற்றுக் 'காட்போட்' பெட்டிகள (பெரிய அளவுகளில்) விற்பனைக் குண்டு. தொடர்பு:-39, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (89207)

குளிர்சாதனப் பெட்டி **(SISIL 60), WASHING MACHINE (BRAND NEW)**, ஸ்பிறிங் கட்டில், **ELECTRIC OVEN**, மின மோட்டார், **2000W** செய்த தைன்மோ, **RADIO** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- ராஜன் (படப்பிடிப்பாளர்), நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (89270)

குளிர்சாதனப் பெட்டி **KELVENATER 2 DOOR, KENWOOD** 5 அடுக்கு **ORIGINAL JAPAN, STEREO** ரேடியோ செற் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு.கிருபாலன், **333A,** கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P.2827.** (89316)

21,200 தொடர் இலக்கமுடைய கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 23,உடுவில் வீதி, மானிப்பாய். (89328)

தனிக்கறுப்பு நிற அல்சேஷன் (பெண்) நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு:-புதிய இலக்கம் 617, (ப.இல. 373), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை மின்சாரசபைக் கட்டடத்துக்கு அருகில்) (89063)

**3GF-LH** எஜர்-கூல் கையால் தூக்ககககூடிய டீசல் ஜெனரேட்டர் 2.8**KW** இன்ஜின் குதிரை வலு 7 விற்பனைக்கு உண்டு. இல.21, சீனியர் லேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம். (89363)

**BROILER**, கல்பேட்ஸ், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் தேவையான நிறையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (89366)

பெரிய மீன்தொட்டி மூடி, ஸ்ராண்ட், மோட்டார்கள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (89367)

மிகவும் நல்ல நிலையிலுள்ள எக்னோபவர் **C.90** மோட்டார் சைக்கிள், புதிய ஆண்களுக்கான லுமாலா சைக்கிள், ஒலிம்பியா ஆங்கிலத் தட்டச்சு (யப்பான்), காஸ்குக்கர், ரீ.செற் இன்னும் பல விற்பனைக்குண்டு. ஞாயிறு, திங்கள் 2 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு:- 129, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (89368)

லவ்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஜக்சன் ஜோய், **2/2,** மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். காலை 10மணி முதல் மாலை 4மணி வரை. (89145)

**LAMINATING FILM 125 MICRON A3, SIZE LEUMS 500WATTS UPS MADE IN U.S.A.** தொடர்பு:- குமார், **T.P. 2961. K.K.S. ROAD, KOKUVIL.** (89351)

## புறொயிலர் விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் விற்கப்படும். சுத்தம் செய்துமகொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத், 40,விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாக) (89317)

## தவறிவிட்டது

கண்லிங்கம் நவரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல.570802020V), விசேட அடையாள அட்டையும் (இல. 09108996) நுணாவில் சந்திக்கும் மட்டுவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆனந்தன் தொலைத்தொடர்பு நிலையம், சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (89379)

## தேனீ வளர்ப்பு ஊக்குவிப்பு

வடமராட்சி கிழக்கு,ஜூன்24

வடமராட்சி கிழக்கில் தேனீ வளர்ப்புத்திட்டம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேனீ வளர்ப்புத் திட்டத்தில் அக்கறைகாட்டுவோருக்குத் தேவையான தேனீப் பெட்டிகள் குறைந்த விலையில் வழங்கப்படவிருப்பதாக விவசாயப் போதனாசிரியர் சி.துரைராசா தெரிவித்தார். (க-182)

## மானுடத்தின் நன்றி

எங்கள் 'மானுடம் நிதியம்' நிறையக் கைகொடுத்த அன்பர்களுக்கு எம் நெஞ்சார்ந்த நன்றி.

சமூகவியல் சமூகம்,
*யாழ். பல்கலைக்கழகம்.*

(89345)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 16 - 12 - 1939



விண்ணில் 25 - 05 - 2001

### அமரர் வெள்ளையன் கணேசு

**கண்ணை இமை காப்பது போல் காத்து**
**எம் நல்வாழ்வுக்கு வழிசமைத்த அன்புருவே!**
**என்றும் நீர் எம் மனதில் நிலைத்திருப்பீர்!....**

இன்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பூநாறி லேன்,*
*கொக்குவில் மேற்கு.*
*கொக்குவில்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
(89370) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அறிவித்தல்
## பால் விலை அதிகரிப்பு

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்**

எமது சங்கம் 01.07.2001ஆம் திகதியில் இருந்து பாலின் விலையை பின்வருமாறு அதிகரித்துள்ளது.

**ஒரு லீற்றர் பாலின் கொள்விலை ரூபா 17/= இலிருந்து ரூபா 19/=**
**ஒரு லீற்றர் பாலின் விற்கும்விலை ரூபா 22/= இலிருந்து ரூபா 24/=**

தற்போது ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, கால்நடைத் தீவன விலை அதிகரிப்பு என்பனவற்றால் பால் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை ரூபா 2/= ஆல் அதிகரித்து இதே ரூபா 2/= ஐ விற்கும் விலையிலும் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. தயவுசெய்து வாடிக்கையாளர்கள் இவ்விலை அதிகரிப்புக்கு ஒத்துழைப்பு நல்கி உதவும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

**கூட்டுறவுச் சேவையிலுள்ள,**
**பொது முகாமையாளர்.**

(C-17188)

**உயர் தொழில்நுட்ப நிறுவனம் - யாழ்ப்பாணம்**

## NDE CIRCLE
## சஞ்சிகை வெளியீடு
## (2000 - 2001)

தவிர்க்க முடியாத காரணங்களினால் இதுவரை வெளியிடப்படாதிருந்த எமது ஆங்கில சஞ்சிகை வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ளது என்ற செய்தியை நண்பர்கள், நலன் விரும்பிகள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**- ஆங்கில தேசிய டிப்ளோமா மாணவர்கள் (2000-2001)**

(89372)

## உயிரியல் / இரசாயனவியல் / இணைந்த கணிதம் / பௌதிகவியல்

| | |
|---|---|
| ※தொழிற்படும் தாவரம் 1 (Study Guide) | ரூ.240.00 |
| ※இரசாயனக் கணிப்பீடுகள் | ரூ.180.00 |
| ※கைத்தொழில் இரசாயனவியல் | ரூ.180.00 |
| ※இரசாயனவியல் MCQ & Explanatory Answers Part - I (பேராசிரியர் ஜே.கே.பி.ஆரியரத்னா) | ரூ.200.00 |
| ※இரசாயனவியல் MCQ & Explanatory Answers Part - III (பேராசிரியர் ஜே.கே.பி.ஆரியரத்னா) | ரூ.160.00 |
| ※இணைந்த் கணிதம் | ரூ.200.00 |
| ※உயர்தர பௌதிகவியல் பரீட்சை *வழிகாட்டி 1 (அலகு 1,2 & 3)* | ரூ.250.00 |
| ※பௌதிகவியல் ஓகஸ்ட் 2000 வினாத்தாள் மாதிரி வினாக்களும் விடைகளும் | ரூ.155.00 |

**அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்க:

**சிவன் மாளிகை பிறைவேட் லிமிட்டெட்**
166, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 2996 (C/17184)

## அவசர ஒன்றுகூடல்

கொழும்புத்துறை கிழக்கு மற்றும் A.V றோட் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்தல் சம்பந்தமாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் கலந்துரையாடல் செய்வதற்கு இந்து கோயில் பரிபாலன சபை, கிறிஸ்தவ கோயில் பரிபாலன சபை, சனசமூக நிலையப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கம், மாதர் சங்கம் ஆகியோர் தயவுசெய்து சமுகம் தரும்படி வேண்டப்படுகிறீர்கள்.

இடம்:- யாழ். ஈ.பி.டி.பி. காரியாலயம்
காலம்:- 26-06-2001 செவ்வாய் காலை 9 மணி.

செயலாளர்
*இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம்,*
கொழும்புத்துறை.

(89364)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் அரிமாக்கழக உறுப்பினர்
**லயன் V.ஞானசம்பந்தன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி வரலட்சுமி வன்னியநாதன்**
அவர்களின்
மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**அரிமாக் கழகத்தினர்,**
*உரும்பிராய்.*

(89365)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கலாநிதி ஆ.தியாகராசா
ம.ம. வித்தியாலய அதிபர்
பண்டிதர்
**திரு. மு. சு. வேலாயுதபிள்ளை**
அவர்கள் அதிபர் சேவையில்
2 - I ற்குப் பதவி உயர்வு
பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

காரையன்னை ஈன்றதவப் புதல்வ ருள்ளே
கலைஞரே பண்டிதரே இடமுங் கொண்டீர்
சீரை மிகும் இரண்டுடனே இருபஃதாண்டு (இக்கல்லூரியில்)
சேவை செய்தீர் நும்பெருமை செப்ப வற்றோ
நேரை யிலாத் தியாகராயர் கலைக்கோ யில்தான்
நின் வரவால் இசைபூத்து நின்ற தண் ணால்
பேருயர்வே லாயுதசீர் அதிபரானீர்
பெம்மானே பல்லாண்டு வாழி வாழி

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கலாநிதி ஆ.தியாகராசா
ம.ம. வித்தியாலயம்.

*காரைநகர்.* (89381)

# T.R.R.O.
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

1. கணனி நடமாடும் சேவை
பயிற்றுநர் தேவை
   a) வடமராட்சியினைச் சேர்ந்தோர் 28.06.2001 காலை 9.30மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் இயங்கும் கணனி நடமாடும் நிலையத்திற்குச் சமுகம் தரவும்.
   b) யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் வடமராட்சிக்குப் பயணம் செய்ய விரும்புவோர் 27.06.2001 மு.ப. 9.00 மணிக்கு எமது நிலையத்திற்குச் சமுகம் தரவும். பயணச்செலவு மேலதிகமாக வழங்கப்படும்.
2. எமது நிலையத்தில் வேலை செய்ய விரும்புவோர் 26.06.2001 பி.ப. 1.30மணிக்கு எமது நிலையத்திற்கு சமுகம் தரவும்.

*106,4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (C/17193)
இயக்குநர்,
T.R.R.O.

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
### முக்கிய கருத்தரங்கு

இடம் : யாக்கரை கரவெட்டி கிழக்கு
காலம் : இன்று (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

*தலைவர்*
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்.
(89378)

# யாழ். பல்கலைக்கழக மெய்யியற் கழக
## சஞ்சிகை வெளியீட்டு நிதிக்கான நிகழ்வுகள்

பருத்தித்துறை மண்ணின் மைந்தன்
**அமரர் சாண்டே M.துரைரத்தினம்**
அவர்களினால் பயிற்சி அளிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவரும் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரருமாகிய திரு. தங்க வேலாயுதம் பரமானந்தம் அவர்களினால் பயிற்சியளிக் கப்பட்ட ஒற்றுமை விளையாட்டுக் கழக வீரர்களால் நடத்திக் காண்பிக் கப்படும்.

### வீரதீரச் செயல்கள்

★ இடம் :- மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கு.
★ காலம் :- இன்று (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை
★ நேரம் :- பி.ப. 2.00 (பு.நே)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மெய்யியற் கழகம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

அன்பளிப்பு:-

கௌரி அழகு மாடம்

அழகுசாதனப் பொருள்கள், எவர்சில்வர் அலுமினியப் பாத்திரங் கள், பிளாஸ்ரிக் பொருள்கள், தையல்நூல், பட்டின் வகைகள், லேஸ் வகைகள் இன்னும் பல பொருள்களை மொத்தமாக நியாய மான விலையில் பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்:

கௌரி அழகு மாடம்

இல. 316, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்,
T.P.NO-021-3227
(89380)

## பெயர் விவரங்களைப் பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்24

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம் மூலம் தேசிய அடையாளஅட்டை, விசேட அடை யாளஅட்டை ஆகியவற்றைப் பெற விரும்பும் சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்களை நாளை திங்கட்கிழமை தொடக்கம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் சந்தி ரோதய வித்தியாலயம் ஆகியவற் றில் பெயர் விவரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அதிபர் கேட் டுள்ளார். (ம-7)

## வீரதீரச் செயல்கள்

யாழ்ப்பாணம்,ஜுன்24

யாழ்.பல்கலைக்கழக மெய்யியற் கழகம் சஞ்சிகை வெளியீட்டு நிதிக் காக நடத்தும் "வீரதீரச்செயல்கள்" நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. (ம-4)

## பரியோவான் ஆலய 200 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜுன்24

சுண்டுக்குழி பரியோவான் ஆலய 200ஆவது ஆண்டு விழா ஆராதனை இன்று காலை 8.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் டுலிப் டிசிக்கோராவும் கலந்து கொள்ள வுள்ளார். (ம-4)

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்24

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங் கத்தின் யாழ்.மாவட்டக் கிளைகளின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கான விசேட கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் விசேட கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள் ளார். (ம-7)

## நாடக விழா

யாழ்ப்பாணம்,ஜுன்24

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய நாடக விழா இன்று ஞாயிற் றுக்கிழமை மாலை 6.30 மணி முதல் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் "அரிச்சந்திர மயான காண்டம்" 'பூதத்தம்பி' ஆகிய சரித்திர நாடகங்களும் 'ஒளி' என் னும் சமூக நாடகமும் இடம்பெறவுள் ளன. (ம)

ராஜா யாழ்ப்பாணம்

9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.00,5.00(புதிய நேரம்)
(C/17000)

லஷ்சுமி இணுவில்.

விஜயகாந்த்,லைலா, நாசர்
நடிப்பில்

கள்ளழகர்

(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.30, 5.00
(89393)

நாகம்ஸ்
சுன்னாகம்

விஜயகாந்த், மீனா
நடித்த

சேதுபதி IPS

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறு விசேட காட்சி 6.00 மணிக்கு
(89382)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி,ஜுன்24

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகல் இடம் பெற்ற இவ்விபத்தில் மின்சாரசபைப் பொறியியலாளரான புலோலி தெற் கைச் சேர்ந்த துரைராசா இராச லிங்கம்(வயது60), பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த குழந்தையன் புஸ்பராசா (வயது34) ஆகியோரே தலையில் படுகாயமடைந்த நிலையில் ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். (ம-117)

கொம்பியூட்டர் பிறின்டிங்
& ஸ்கிறின் பிறின்டிங்
சிறந்த முறையில்
செய்திட
தாரணி பிறின்டேஸ்

THARANI ARTS

தாரணி ஆட்ஸ் & பிறின்டேஸ்

நவீன முறையில் கொம்பியூட்டர் டிசைனிங் & கட்டிங் செய்து கொடுக்கப்படும். பிளாஸ்ரிக் போட், கீரெக், பாடசாலை பட்ஜ் என்பன சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

541(319), K.K.S. Road, Jaffna.
*மனோகரா தியேட்டர் அருகில்.*
*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய்.*
(89386)

RENNY OPTICIANS

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்துக்
கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

இல.540,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
288,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கனொன் போட்டோ கொப்பி சேவிஸ் கட்டடம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.
(C/17189)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் பவானந்தன் சண்முகானந்தன்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்வன் பவானந்தன் சண்முகானந்தன் அவர்கள் 20.06.2001 புதன் கிழமை லண்டனில் அகாலமரணமானார்.

அன்னார் பவானந்தன் - மனோன்மணிதேவி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணானந்தனின் பாசமிகு தம்பியும் சிவரமண னின் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) பாசமிகு அண்ணனும் யோகேஸ் வரி, இராசதுரை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சரவண பவானந்தன் (இளைப்பாறிய ஆசிரியர்), கருணானந்தன்(சுவிஸ்), ஆறு முகானந்தன்(உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), குகேந் திரன்(கனடா), ஆனந்தசுந்தரம்(லண்டன்), செல்வி திலகவதி பெரிய தம்பி(முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்), ஜெகதேவி, கௌரி (ஆசிரியை யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சியா மளா (தென்னை ஆராய்ச்சி நிலையம், நுணுவில்), சௌந்தரநாயகி (வேலணை), காலஞ்சென்ற லிங்கராணி (உதயகதிர்காமம்), பரமேஸ் வரி (வதிரி), அனுசியாதேவி (வதிரி) காலஞ்சென்ற விக்கினேஸ்வர மூர்த்தி, சந்திரலிங்கம் (இ.போ.ச. பருத்தித்துறை), சபாரத்தினம் ஆகியோ ரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*
(C/17190)
தகவல்:
சி.பவானந்தன்
(தந்தை)

## ஆறுமுகம் குணநாயகம்

(முன்னாள் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் நாயகம்)

அராலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வெள்ளவத்தை 141/2 W.A சில்வா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணநாயகம் அவர்கள் 21.06.2001 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னரஞ்சிதத்தின் அருமைக் கணவரும் திருமதி விமலா சண்முகநாதன், திருமதி தில்லா கெங்காதரன், சித்தார்த் தன், திருமதி யோகா சந்திரக்குமார் ஆகியோரின் அருமைத் தந்தை யாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், கெங்காதரன் மற்றும் திருமதி மாலா, சந்திரக்குமார் ஆகியோரின் மாமனாரும் கார்த்திகா, ரிஷி, அஞ்சனா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*141/2, W.A சில்வா மாவத்தை,*
*கொழும்பு - 6.*
(89384)
தகவல்:
திருமதி தி.கெங்காதரன்
(மகள்)

# எமக்கு எதிரான சதி தொடர்கிறது எனினும் அஞ்சிப் பின்வாங்கோம்!

## ரவூப் ஹக்கீம் சூளுரை

கொழும்பு,ஜூன்24

காரணம் எதுவும் கூறாமல் அமைச்சரவையில் இருந்து என்னை வெளியேற்றிய பின்பும் எனக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் எதிரான சதி முயற்சிகள் தொடர்கின்றன. சதிகளைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். பின்வாங்கவும் மாட்டேன். கட்சியை முன்னெடுத்துச் செல்வேன்.

இவ்வாறு சூளுரைத்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

முஸ்லிம் காங்கிரஸ் சமாதானத்தை விரும்பும் கட்சி. முஸ்லிம் இளைஞர்களை ஆயுதம் ஏந்தவிடாமல் ஜனநாயக அரசியலில் ஈடுபடுத்திய கட்சி. தேர்தல்கள் மூலம் தேசியக் கட்சிகளை ஆட்சியில் அமர்த்த உதவி வந்த கட்சி. இப்படி இருக்க முஸ்லிம் காங்கிரஸை அழிக்கச் சதிகள் தொடர்கின்றன. போராளிகள், அபிமானிகளின் உதவியுடன் இத்தகைய சதிகளை வெற்றி கொள்வதற்கான போராட்டத்தில் வீதியில் இறங்கிப் போராட முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தயங்காது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பு வழங்குமாறு கோருகிறார் மகேஸ்வரன்

கொழும்பு,ஜூன்24

யாழ்ப்பாணம் செல்வதற்கான அரச பாதுகாப்பு தமக்கு வழங்கப்படாததால் அங்கு செல்ல முடியாதிருப்பதாகவும் எனவே உடனடியாக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான தி.மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழனன்று மகேஸ்வரன் எம்பி. விடுத்த இந்தக் கோரிக்கை தொடர்பாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையிடம் தெரிவிப்பதாக சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க கூறியிருக்கிறார்.

ஈ.பி.டி.பி. அமைப்புக்கு 5 பிக் - அப் வாகனங்களும் 300பேருக்கான ஆயுதங்களும் சட்டவிரோதமாக வழங்கப்பட்டிருப்பதாகவும், ஈ.பி.டி.பியினரால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் மகேஸ்வரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பிய போது தெரிவித்தார். (ஐ)

## நேற்றைய கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ். அணி திருமலை அணியிடம் மூன்று விக்கெட்டுக்களால் தோல்வி

மாத்தளை,ஜூன்24

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் மாகாணங்கள் தோறும் 19 வயதுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி திருகோணமலை மாவட்ட அணியிடம் மூன்று விக்கெட்டுகளினால் தோல்வியடைந்தது.

மாத்தளை அலுவிகாரை சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

பூவா, தலையா சுண்டிப் பார்த்ததில் வெற்றியீட்டிய யாழ்.மாவட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாட்டத்தைத் தேர்ந்தெடுத்து களமிறங்கி, 43 ஓவர்களில் 187 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

லவேந்திரா - 29, றொஹான் - 28, ரஜீவ்குமார் - 27, பிரகாஷ் - 25, சிவசங்கர் - 13, சிற்சபேசன் - 10, அகிலன் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களைப் பெற்றனர். மலாக்க 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்ளையும் வரீக் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்ளையும் தயாமின் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருமலை அணி ஒரு நிலையில் 4 விக்கெட்டுக்களுக்கு 16 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது. எனினும் தயாலிங்கம் (70 ஓட்டங்கள்), வரீக் (49 ஓட்டங்கள்) ஆகிய இருவரினதும் அபார ஆட்டத்தினால் 42 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்று அவ்வணி ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

அகிலன் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்ளையும் கிருஷ்ணராஜா 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணியை யாழ்.அணி தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா அணியுடனான ஆட்டத்திலும் யாழ்.அணி 50 ஓட்டங்களால் வென்றது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் பந்துல வர்ணபுரவின் நேரடி வழிகாட்டலில் இன்று முழுநாளும் மாத்தளை அலுவிகாரை மைதானத்தில் யாழ். கிரிக்கெட் அணிக்கு என நடத்தப் படும் விசேட கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றில் யாழ்.வீரர்கள் பங்கு பற்றுவர். நாளை அவர்கள் யாழ்ப்பாணத்துக்குத் திரும்புவதற்கான தமது பயணத்தை ஆரம்பிப்பர். (உ)

## நாயன்மார்கட்டில் மோதல்

யாழ்ப்பாணம்,ஜூன்24

நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று முற்பகல் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

அப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் சிலர் மீது படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (ஐ)

## தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவிப்பு

சண்டிலிப்பாய்,ஜூன்24

சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த எட்டுப் பணியாளர்கள் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான வைபவம் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமையன்று சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மேற்படி எட்டுப் பணியாளர்களுக்கும் தங்கப் பதக்கத்தை அணிவித்துக் கௌரவித்தார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் சங்கானை அரசடி ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையை அடுத்து விழா நாயகர்கள் கூட்ட மைதானத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

## அகதிகளின் அவல நிலையை விளக்கி ஐ.நாவுக்குக் கடிதம்

கொழும்பு,ஜூன்24

இலங்கையில் முகாம்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதிகளின் அவல நிலை குறித்துத் திருகோணமலையைச் சேர்ந்த சட்டத்தரணிகள், டாக்டர்கள், தொழிற்சங்கங்களின் பிரமுகர்கள் கூட்டாக உலக அமைப்புக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

ஐ.நா.பொதுச் செயலாளர், அமெரிக்க ஜனாதிபதி ஆகியோருடன் ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், நோர்வே, ஜேர்மன், பிரான்ஸ், சுவீடன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அரசுகளுக்கும் ஈமெயில் மூலம் இம்மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"1983ஆம் ஆண்டு தொடக்கம் 15 லட்சம் மக்களுக்கு மேல் மனிதன் மேற்கொண்ட அழிவுச் செயல் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். இலங்கையில் தமிழர்களுக்கு 2500 ஆண்டுகளுக்கு அப்பால் செல்லும் நீண்டகால வரலாறு உண்டு.

இவ்வரலாற்றை இன்றைய சிங்கள வரலாற்றாசிரியர்கள் ஆட்சியிலிருப்போரின் அதிகாரத்தினைப் பயன்படுத்தி திருத்தி, திரித்து வருகின்றனர். 1981இல் யாழ்.மாவட்டத்தில் 8,85,000 மக்கள் வாழ்ந்தனர். இன்று அதில் அரைப்பங்கினரே வாழ்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் 50 சதவீதமான நிலப்பரப்பு விமானக் குண்டுத் தாக்குதல், ஆட்லறி ஷெல் தாக்குதல், மோட்டர் ஷெல் தாக்குதல், ஆகியன காரணமாக அழிந்துவிட்டது. 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், ஊனமடைந்தும் உள்ளனர்.

இதனால் தமிழ் மக்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியே வெளிநாடுகளுக்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் செல்கின்றனர். பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் அரச குடியேற்றங்கள் மூலம் தமிழரின் பாரம்பரியத் தாயகத்தை சிங்கள மயமாக்குவதில் ஈடுபட்டு வந்தன.

நலன்புரி முகாம் என்ற பேரில் கொட்டில்களில் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் அரைப்பங்கு மக்கள் சொந்தப் பட்டினங்கள், கிராமங்களில் இருந்து துரத்தப்பட்டுள்ளனர். அவர்கள் வேறு இடங்களில் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். பொருளாதாரத்தடை, போக்குவரத்துக் கட்டுப்பாடு காரணமாக வன்னிப் பிராந்தியத்தில் வாழும் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள் என்று ஈமெயில் மூலம் அனுப்பப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உதயன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'உதயன்' பிரதம ஆசிரியரினதும், ஊழியரினதும் வலது கால்கள் விபத்தில் முறிந்தன. உதயன் ஆசிரியர் தலையிலும் காயமடைந்தார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள இருவருக்கும் நேற்றிரவு சத்திரசிகிச்சை செய்யப்படவிருந்தது.

நேற்றுக் காலை விபத்து நடைபெற்ற இலுப்பையடிச் சந்திப் பகுதியில் கடந்த மே 6ஆம் திகதி படையினரின் 'பிக் - அப்' வாகனத்துடன் இடம்பெற்ற விபத்து ஒன்றில 'உதயன்' நிறுவன ஆளணி முகாமையாளர் க.நந்தகுமார் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அவசர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுமானால் தற்போது அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைத் தொடர்ந்தும் தடுத்து வைக்கமுடியாத நிலை ஏற்படும். அவர்கள் மீதான வழக்குகள் உட்பட சகல நடவடிக்கைகளும் செயலற்றதாகி விடும் - என்றும் அமைச்சர் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.மு அரசுக்கான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொண்டதை அடுத்து நாடாளுமன்றில் அரசு தனது பெரும்பான்மையை இழந்துள்ளது. இந்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை எதிர்க் கட்சிகளால் தோற்கப்படும் நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-9)

## மக்கள் எதிர்த்தால் மட்டுமே வீடு செல்வோம் அரசாங்கத்தை எவரும் அசைக்க முடியாது!

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு,ஜூன்24

மக்களின் ஆணை, ஆதரவு இருக்கும் வரை எம்மை எவரும் அசைக்க முடியாது. பொதுமக்கள் விரட்டினால் மட்டுமே நாம் வீடு செல்வோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அத்தனகலையில் கூட்டுறவு வைத்தியசாலைக்கென அமைக்கப்படவுள்ள ஐந்து மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க ஆசனத்தில் இருந்த சிலர் எதிரணி ஆசனங்களில் அமர்ந்ததற்காக நாம் கவலை கொள்ளவில்லை. அவர்களின் நடவடிக்கை காரணமாக அரசாங்கம் பலவீனமடைந்து விடவில்லை. எனினும் அரசாங்கத்துக்கு முழுமையாகப் பிரச்சினை இல்லை என்று நான் கூறமாட்டேன். சின்னச் சின்ன பிரச்சினைகள் உள்ளன. இந்தியாவில் ஏழு ஆண்டுகளில் ஐந்து அரசாங்கங்கள் மாறின.

விடுதலைப் புலிகளால் ஆனையிறவு முகாம் தாக்கி அழிக்கப்பட்டதால் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்தன.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக் கலவரத்தைப் போன்று நாட்டில் மீண்டும் ஒரு கலவரத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்துக்கும் 100 அல்லது 200 பேர் கொண்ட கலகம் விளைவிப்போர் அனுப்பப்பட்டுள்ளனர். இது குறித்து மக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் -

1994 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற 10 தேர்தல்களிலும் பொது மக்கள் கடலலை போன்று எமக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருக்குக் கிடைத்த அமோக ஆதரவை விட கூடுதலான ஆதரவு எமக்குக் கிடைத்துள்ளது - என்றும் ஜனாதிபதி தமது உரையில் தெரிவித்தார்.

பிரிவு 2 இன்று ஆரம்பம்
மீண்டும் யாழ்நகரில் ஒரு தென்றல்
தமிழ் : திரு. குழந்தை
A/L 2001
வினாவிடை வகுப்பு
பிரிவு 1 சனி, ஞாயிறு 8.00 மணி
பிரிவு 2 சனி, ஞாயிறு 3.30 மணி
விக்னா கல்வி நிறுவனம்
(89374)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
மம்முட்டி, சுரேஸ்கோபி நடித்த
காஷ்மீர் ரோஜாக்கள்
பிரதிகள் உடன் பெறலாம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17198)

வீடியோ CD வெளியீடு
சுரேஸ்கோபி, மம்முட்டி நடித்த
★ காஷ்மீர் ரோஜாக்கள்
விஷ்ணு வீடியோ
K.K.S. றோட், கோண்டாவில்
(89390)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
※ காஷ்மீர் ரோஜாக்கள்
அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/17199)

நவாலி அட்டகிரி முருகன் ஆலயம்
மேற்படி ஆலய கொடியேற்ற விழா நாளை (25.06.2001) திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து இடம் பெறும்.
- தர்மகர்த்தா சபை.
(C/17200)

K.C.C.C. SPORTS CLUB



ஆறுமுகம் கமலநாதன்
(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
ஞாபகார்த்த
துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி - 2001
6a SIDE 5 OVERS (தோல்பந்து)
இறுதிப் போட்டி
திகதி :- இன்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்
பிரதம விருந்தினர் :- திரு.K.சிவாஜி (அதிபர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
சிறப்பு விருந்தினர் :- திரு.பொ.கமலநாதன் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
செயலாளர் (89361) சுற்றுப்போட்டிக் குழு.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.